


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524







29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN
# உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

Canadian Media Circulation Audit

$1.00

416-752-1524   www.uthayannews.ca










உதயம் 1577 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday June 26, 2026

# கனடாவில் LATIKA PRODUCTIONS வழங்கும் அற்புதமான 'SUPER SINGER-Live in Toronto' இசை நிகழ்ச்சி

கனடாவில் இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் நிறுவனமான **'LATIKA PRODUCTIONS.** வழங்கும் அற்புதமான **'SUPER SINGER-Live in Toronto'** இசை நிகழ்ச்சி எதிர்வரும் சனிக்கிழமை 27-06-2026 அன்று மாலை 6.00 மணிக்கு 300 **Water Street. Whitby** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **CANADA EVENT CENTRE** என்னும் அழகிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இசை நிகழ்ச்சிக்கான அனுமதிச் சீட்டுக்களை **eventbrite.ca** என்னும் இணையத்தளத்திலும் அல்லது 647 996 5922 - 647 549 0059 ஆகிய இலக்கங்களை அழைத்தும் அல்லது மண்டப வாசலிலும் பெற்றுக்கொள்ளலாம்.



## ஸ்காபறோ SARAVANAA BHAVAN உணவகம் கனடா தினத்தன்று முதியோர்களுக்காக ஏற்பாடு செய்துள்ள CANADA DAY FREE DOSA FEAST

ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ஸ்காபறோ SARAVANAA BHAVAN உணவகம் கனடா தினத்தன்று முதியோர்களுக்காக ஏற்பாடு செய்துள்ள CANADA DAY FREE DOSA FEAST எதிர்வரும் யூலை 1ம் திகதி பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வுரை இடம்பெறும். இந்த கொண்டாட்டத்தில் சரியான நேரத்தில் இணைந்து கொள்ளவும். (உள்ளே விளம்பரத்தைப் பார்க்கவும்)

# கனடா BEHIND ME INTERNATIONAL MEDIA ஊடகம் நடத்திய LEGENDS & ICONS AWARDS 2026 சாதனை விருதுகள் வழங்கும் விழா

கனடாவைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் **BEHIND ME INTERNATIONAL MEDIA** ஊடக நிறுவனம் முதலாவது முறையாக நடத்திய **LEGENDS & ICONS AWARDS -2026** என்னும் சாதனையாளர்களுக்கு் சிறப்பாக நடைபெற்றது.

**BEHIND ME INTERNATIONAL MEDIA** நிறுவனத்தின் தலைவரும் இந்த **LEGENDS & ICONS AWARDS** விருதுகள் வழங்கும் விழாவை தொடர்ச்சியாக ஆண்டு தோறும் நடத்த வேண்டும் என்ற திடசங்கற்ப்பத்தோடு செயற்படுபவருமான கனேந்திரன் செல்வராஜா அவர்கள் தனது குழுவினர் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் உதவியோடு விழாவை ஏற்பாடு செய்திருந்தார்.

(தொடர்ச்சி 16ம் பக்கம)

















உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
416.893.3216


JJ Rental
கதிரை மேசை வாடகைக்கு
416.553.1540 | 647.960.1415
உங்கள் வீட்டு வைபவங்களுக்குத் தேவையான கதிரைகள், மேசைகள்,
பார்க் ஒன்றுகூடலுக்கு வேண்டிய கதிரைகள், மேசைகள், TENTS, BBQ மிஷின்
GAS அடுப்புகள் அனைத்தும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
416.553.1540 | 647.960.1415


நீங்கள் விரும்பும் HONDA வாகனங்களை ரமணன் திரு என்னும்
விற்பனை முகவரோடு தமிழில் உரையாடி வாங்கலாம்
Honda CHECKERED FLAG
Spring into action with NEW LOWER RATES.
THE 2026 CIVIC SPORT TOURING HYBRID 1.99% APR + QUALIFIED HONDA OWNERS GET A $500 LOYALTY BONUS!
LEASE UP TO 24 MONTHS ON ALL 2026 CIVIC MODELS
Spring into action with NEW LOWER RATES.
$0 DOWN PAYMENT + NEW LOWER RATES
Spring forward in pure style.
THE 2026 ACCORD TOURING HYBRID 2.49% APR + QUALIFIED HONDA OWNERS GET A $750 LOYALTY BONUS!
LEASE UP TO 24 MONTHS ON ALL 2026 ACCORD MODELS
$0 DOWN PAYMENT + NEW LOWER RATES
THE 2026 CR-V LX 2WD LEASE FROM $115 WEEKLY, INCLUDES $1,000 HONDA LEASE DOLLARS BONUS. 4.39% APR FOR 60 MONTHS $750 LOYALTY BONUS
$0 DOWN PAYMENT + $1,000 HONDA BONUS
THE 2026 CR-V TRAILSPORT HYBRID LEASE FROM $143 WEEKLY, INCLUDES $1,000 HONDA BONUS. 4.39% APR FOR 60 MONTHS $750 LOYALTY BONUS
THE 2026 HR-V EX-L 3.49% APR UP TO 24 MONTHS ON ALL REMAINING 2026 HR-V MODELS $500 LOYALTY BONUS!
THE 2026 PILOT SPORT LEASE FROM $177 WEEKLY, INCLUDES $1,000 HONDA LEASE DOLLARS BONUS. 5.69% APR FOR 60 MONTHS $1,000 LOYALTY BONUS!
#1 CIVIC Canada's Best-selling Car
CANADIAN CAR OF THE YEAR AWARDS 2026
ONTARIO BUILT. CANADIAN DRIVEN.
AutoTraderAwards
HONDA
Ontario Honda Dealers Official Partner
Rafih AUTO GROUP
Midtown Honda
HONDA
RAMANAN THIRU
SALES CONSULTANT
647 818 6645
RESERVE YOURS TODAY
MADE WITH DOMESTIC & IMPORTED PARTS.
† See dealer for full details.
◊ O.A.C. Terms and conditions apply.

# உதயன் கதிரோட்டம்

## தேசத்தின் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் "அரசியல்" செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா?

ஒரு தேசத்தில் இயற்கையாகவோ அன்றி படைப்பாகவோ குவிந்து கிடக்கும் கடல் வளம் மற்றும் கனிம வளம் ஆகியவை அந்தந்த தேசத்தின் அரசுக்கும் மக்களுக்குமே சொந்தமானவை. ஆனால் இவை பற்றி எதுவும் அக்கறை கொள்ளாத பொதுமக்களில் பெரும்பகுதியினர் வாழ்க்கையில் கஸ்டங்களை அனுபவித்தாலும் இவ்வாறான கனிமக் கொள்ளை அல்லது கடல்வளத்தை சூறையாடுவது போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவது இல்லை.
அதற்கு மேலாக, இயற்கையின் கொடையாகவும் அதன் படைப்பாகவும் விளங்கும் மீன்கள் மற்றும் கடல் உணவுப்பொருட்கள் ஆகிய கடல்வளம் மற்றும் தங்கம், வெள்ளி, உருக்கு, நிலக்கரி வேறு உலோகங்கள் தயாரிக்கக் கூடிய இன்னோரென்ன கனிமங்கள் உலகின் பல நாடுகளிலும் நிறைந்து கிடக்கின்றன.இவ்வாறு தான் கடல் வளமும். ஏழை மீனவர்கள் கடலுக்குச் சென்று தங்கள் உயிர்களை பணயம் வைத்து மீன்களை பிடித்து வர "எம்மூரின்" சம்மாட்டிகள் எனப்படும் "முதலாளிகள்" அவற்றின் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொண்டு செல்வந்தர்களாக உயர்ந்து சமூக அந்தஸ்த்தையும் பெற்றுக்கொள்கின்றார்கள்.

குறிப்பாக தென்னாபிரிக்கா. நைஜீரியா மற்றும் தென்அமெரிக்க நாடுகள் ஆபிரிக்க நாடுகள் போன்றவற்றில் தாராளமாக கனிம வளங்கள் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் இவை பற்றி அந்தந்த நாடுகளில் வாழும் சாதாரண மக்களோ அன்றி ஆர்வம் குறைந்தவர்களோ கவலைப்படுவதில்லை. இதனால் அந்தந்த நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் கனிம வளங்கள் தொடர்பாகவோ அன்றி சட்டங்கள் தொடர்பாகவோ நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். குறிப்பாக ஆபிரிக்க நாடுகள் பல விலையுயர்ந்த கனிம வளங்களைக் தம்மகத்தே கொண்டிருந்தாலும் அவைபற்றிய வர்த்தக வாய்ப்புக்கள் பற்றிய ஆர்வம் கொண்டட பிறநாட்டு செல்வந்தர்கள் அல்லது பல்தேசிய நிறுவனங்கள் அந்த நாடுகளின் அரசியல்வாதிகளையும் அரசாங்க அதிகாரிகளையும் அமைச்சர்களையும் ஏதோ வகையில் தொடர்பு கொண்டு நெருக்கமான உறவுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் செய்து அந்தந்த நாடுகளில் உள்ள கனிம வளங்களை அகழ்ந்து எடுக்கும் பாரிய திட்டங்களை தங்கள் கைகளுக்குள் எடுத்து அந்த நாட்டின் சாதாரண மக்களுக்கும் கிடைக்க வேண்டிய சலுகைகள் அல்லது பயன் ஆகியவற்றை மறைத்து பிறநாட்டவர்கள் அதன் அதிக பலன்களை அனுபவிக்கின்றார்கள். ஆனால் அந்தந்த நாடுகளின் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இதனால் கிடைக்கும் பெரும் நிதியைக் கொண்டு தங்களை செல்வந்தர்களாக உயர்த்திக் கொள்கின்றார்கள். இவ்வாறு ஒரு நாட்டில் நூறு பேர் இந்த மோசடிகளுக்கு பக்கத்துணையாக இருந்து சமூகத்தில் பணபலம் உள்ளவர்களாக உயரத்தை எட்டுகின்றார்கள். ஆனால் அந்த நாட்டின் ஏழை அல்லது நடுத்தர வகுப்பு மக்கள் தொடர்ந்து ஏழைகளாகவே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.
இவ்வாறு அந்தந்த நாடுகளில் உள்ள சாதாரண மக்கள் வாழ்க்கையின் அடிமட்டத்திலேயே எவ்வித வசதியும் இன்றி கஸ்டங்களை அனுபவிக்க, மறுபக்கத்தில் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்யும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.
இவ்வாறாகவே இலங்கையிலும் இந்தியாவிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்து தங்கள் அரசியல் பலத்தையும் அதிகார பலத்தையும் பயன்படுத்தி அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.

இதன் காரணமாகவே இம் மாதத்தின் எமது தேசக்குரலில் நாம் இந்த மறைந்து கிடக்கும் கிடக்கும் சட்ட விரோத செயல்களையும் ஊழல் விடயங்களையும் பற்றி எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம். இதனாலேயே வடக்கினதும் கிழக்கினதும் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா? என்ற கேள்வியை முன்வைக்கின்றோம்.
நாம் அறிந்த வகையில் இலங்கையிலும் கனிமக் கொள்கை மற்றும் சுரங்க அகழ்வு உரிமங்கள் தொடர்பாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பான சட்ட திட்டங்கள் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ன.
முன்னைய மகிந்தாவின் ஆட்சிக் காலத்திலும் பின்னர் கோட்டாபாய ஆட்சியின் காலத்திலும் மற்றுமொரு ஊழல்வாதி நாமல் ராஜபக்ச வெளிநாட்டு பல்தேசியக் கம்பனிகளை இலங்கைக்கு அழைத்து அதிகளவு நிதியை அவர்களிடமிருந்து பெற்று கோடிக்கணக்கான டாலர்களை சுருட்டிக் கொண்டார் என்பதும் தற்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள்.

இலங்கையில் கனிம ஆய்வு மற்றும் சுரங்க அகழ்வு நடவடிக்கைகள், குறிப்பாக புதுப்பிக்க முடியாத கனிம வளங்களை அகழ்ந்தெடுப்பதன் மூலம் ஏற்படும் மீட்டெடுக்க முடியாத சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து மக்கள் மத்தியில் அதிகரித்து வரும் அச்சம் மற்றும் எதிர்ப்புகளை சுட்டிக்காட்டிவரும் பல சமூக ஆர்வலர்களும் அமைப்புக்களும் உள்ள நிலையில் அவர்களை தங்கள் அதிகார பலத்தைப் பாவித்து அடக்கியும் சிறையில் அடைத்தும் அல்லது
கொலைப் பயமுறுத்தல் செய்தும் ஊழல்வாதிகள் தங்கள் "திருட்டுக்களை" தொடர்ந்து வருகின்றார்கள்.
சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட நீண்ட காலத்திற்குப் பின்னரும் நிலச்சரிவுகள், விவசாய உற்பத்தித் திறன் இழப்பு, நீர் வளங்கள் வற்றிப்போதல், சுற்றுச்சூழல் அமைப்புகளின் அழிவு மற்றும் பல்வேறு சூழலியல் பாதிப்புகள் போன்ற நீண்டகால விளைவுகளை பாதிக்கப்பட்ட சமூகங்களே சுமக்க வேண்டியு நிலை சாதாரண மக்களுக்கே ஏற்படுகின்றன. பாதுகாப்பான இடங்களில் தங்கள் மாளிகைகளைக் கட்டி வாழும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இயற்கை அனர்த்தங்களால் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை.இந்தியாவில் சென்னை போன்ற நகரங்கள் இதற்கு நல்ல உதாரணமாகும். எந்த ஒரு அரசியல்வாதியும் வெள்ளப்பெருக்கால் சிரமங்களை சந்திப்பதில்லை. ஆனால் மக்களைச் சந்திக்க விலை உயர்ந்த வாகனங்களில் அல்லது வானூர்திகளில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வருவார்கள்.
அண்மையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் இந்த கனிம வளக்கொள்ளைகளை தடுக்கும் கனிமக் கொள்கை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நீண்ட உரையாற்றியுள்ளார். அத்துடன் அவர்கள் இந்த விடயம் தொடர்பான அமைச்சரிடம் பல கேள்விகளையும் தொடத்துள்ளார்.
இனிவரும் நாட்களில் நாமும் இந்த விடயம் தொடர்பான விடயங்களில் ஆர்வத்துடன் எமது அவதானிப்பை செலுத்த வேண்டும் என்றும் தேசத்தின் சொத்தை தனி நபர்களும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் "சூறையாடுவதை" தடுக்க போராட வேண்டும் என்றும் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்!

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers
- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் எம்.பி. ஜெயானந்தமூர்த்தி காலமானார்!



மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சேனாதிராசா ஜெயானந்தமூர்த்தி (வயது 61) சுகவீனம் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் காலமானார்.

1965 ஆம் ஆண்டு செப்டெம்பர் 16 ஆம் திகதி பிறந்த இவர், தனது ஆரம்பக் காலத்தில் ஆசிரியராகப் பணியாற்றியமையுடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் பிராந்திய செய்தியாளராகப் பல முன்னணி ஊடகங்களில் திறம்பட ஊடகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து அரசியல் களத்தில் கால் பதித்த அவர், கடந்த 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு, 44 ஆயிரத்து 457 விருப்பு வாக்குகளைப் பெற்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக முதன்முறையாகத் தெரிவு செய்யப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலகட்டத்தில், கடந்த 2008 ஆம் ஆண்டு "அழிக்கப்பட்ட தமிழ் கிராமங்கள்" என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவண நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பலத்த உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக, அவர் தனது குடும்பத்துடன் பிரித்தானியாவுக்குப் புலம்பெயர நேரிட்டது.

அரசியல்வாதியாகவும், நேர்மையான ஊடகவியலாளராகவும் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட இவரது திடீர் மறைவு, மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.



# ஜனநாயகத்தையும் கல்வி சுதந்திரத்தையும் காக்கவே பேராதனை மாணவர்கள் உயிர்த் தியாகம் செய்தனர்!

## விரிவுரையாளர் இந்திக தென்னகோன் உரை

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் அன்று தங்களது உயிர்களைத் தியாகம் செய்தமை, இந்த நாட்டின் ஜனநாயக உரிமைகளையும், பேச்சுரிமையையும், பல்கலைக்கழகங்களுக்குள் நிலவ வேண்டிய கல்விசார் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துவதற்காகவேயாகும் என்று விரிவுரையாளர் இந்திக தென்னகோன் தெரிவித்தார்.

தேசிய மாணவர் வீரர் தினத்தை முன்னிட்டு கொழும்பில் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றும்போது, பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றில் பொலிஸாரின் தலையீடு கோரப்பட்ட ஒரு துரதிர்ஷ்டவசமான சம்பவத்தையும், அதன் விளைவாக மாணவர் பத்மசிறி கொன்னவெல படுகொலை செய்யப்பட்டமையையும் நினைவு கூர்ந்தார்.

தற்போதைய பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சூழல் குறித்துப் பேசிய அவர், இது ஒரு விமர்சனமாக அல்லாமல், அன்றைய காலச் சூழலின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதற்காகவே தாம் இதனைப் பகிர்ந்துகொள்வதாகவும் குறிப்பிட்டார்.

அன்று மாணவர்கள் நடத்திய போராட்டங்கள் அனைத்தும், நாட்டின் ஒட்டுமொத்த ஜனநாயகக் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்கும், பல்கலைக் கழகத்துக்குள் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றங்களை நிலைநிறுத்துவதற்கும் முன்னெடுக்கப்பட்டவை என்பதை விரிவுரையாளர் இந்திக தென்னகோன் தனது உரையில் மேலும் வலியுறுத்தினார்.

# இலங்கையில் மனிதப் புதைகுழி ஆய்வுக்கு நிபுணத்துவம் போதியளவு இல்லை என ஒப்புக்கொள்கின்றார் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கா!



**- ந.லோகதயாளன்**

"நாங்கள் ஓர் உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது நாட்டில் மனிதவியல் துறை, உளவியல் ஆலோசனை போன்றவற்றுக்குப் போதிய நிபுணத்துவம் இல்லை. மனிதப் புதை குழியில் ஆய்வு செய்வதற்குரிய சரியான தொல்லியல் நிபுணர்கள் போதியளவில் இல்லை." - என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நீதி அமைச்சர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிக் குமிடையிலான கலந்துரையாடல் சனிக்கிழமை 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி ர.சுரேந்திரகுமார் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடம் இணைந்து செயற்பட்டு வருகின்றது என்றார்.

"தற்போது செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்ந்து எடுக்கப்படும் என்புத் தொகுதிகள் மருத்துவ பீடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அவற்றை அடையாளம் காணும் நோக்கில் ஒரு மனிதவியல் ஆய்வகத்தையும், மரபணு, (டி.என்.ஏ) ஆய்வகத்தையும் உருவாக்க முயற்சி செய்து வருகின்றோம்.

எங்களுடைய முயற்சியின் மூலம் ஆய்வுகூடத்திற்குத் தேவையான சில இயந்திரங்களை பெற்றுள்ளோம். ஆனால் ஆய்வுகூடத்தை முழுமையாக அமைக்க இன்னும் கூடுதல் உதவி தேவைப்படுகின்றது.

எனவே, நீதி அமைச்சரும் காணாமல் போனோருக்கான அலுவலகமும் எங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும். ஏனெனில், போதுமான வசதிகள் இல்லாமல் இத்தனை தரவுகளைப் பராமரிப்பதும், பகுப்பாய்வு செய்வதும், சரியான முறையில் வகைப்படுத்துவதும், அடையாளம் காண்பதற்கான உதவிகளை வழங்குவதும் மிகவும் கடினமாக உள்ளன." - என்றும் அவர் கூறினார்.

இதற்கு நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார பதிலளிக்கையில்,

"நாங்கள் ஓர் உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது நாட்டில் மனிதவியல் துறை, உளவியல் ஆலோசனை ஆகியவற்றில் போதிய நிபுணத்துவம் இல்லை. காணாமல்போனோருக்கான அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகமும் இணைந்து மரபணு (டி.என்.ஏ) பரிசோதனைகளை மேற்கொள்வதற்குரிய ஆய்வுகூடங்களை நிறுவுவதற்கும் அதனை மேம்படுத்துவதற்குரிய செயற்றிட்டங்களுக்கான முன்மொழிவுகளைச் செய்து வருகின்றோம்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திடமும் ஏதேனும் முன்மொழிவுகளை வைத்திருந்தால் அதனை நீங்கள் காணாமல்போனோருக்கான அலுவலகத்திடம் கொடுக்கலாம். உங்களுடைய முன்மொழிவுகளுக்கு நிதி உதவிகள் வழங்குவதற்கு பல நன்கொடையாளர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் மூலம் உதவுவோம்.

மனிதப் புதைகுழியில் ஆய்வு செய்வதற்குரிய சரியான தொல்லியல் நிபுணர்கள் போதியளவில் இல்லை. எனவே நிபுணர்களை மேம்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்க வேண்டும். இங்கு இருக்கக்கூடிய பரிசோதனைக் கூடங்களையும் மேம்படுத்த வேண்டும். அரசாங்கப் பகுப்பாய்வு ஆய்வுகூடங்களினுடைய வளங்களை மேம்படுத்த வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை கட்டாயமாக எடுக்க வேண்டும். எதிர்காலத் திட்டமிடல்களின்போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துடன் நாங்கள் இணைந்து மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கலாம்." - என்றார்.

# ஞானசார தேரர் தாக்கல் செய்த மேன்முறையீடு நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது: 9 மாத சிறை உறுதி!



இஸ்லாமிய மார்க்கத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டு, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க முயன்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு, கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விதித்த 9 மாத சிறைத்தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் யூன் 23ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை உறுதி செய்து தீர்ப்பளித்துள்ளது.

இந்தச் சிறைத்தண்டனையில் இருந்து தன்னை விடுவிக்குமாறு கோரி ஞானசார தேரர் தரப்பால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேன்முறையீட்டு மனுவை முழுமையாக நிராகரித்து, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

**வழக்கின் பின்னணி**

கடந்த 2016ஆம் ஆண்டு கிருலப்பனை பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், இஸ்லாமிய மார்க்கத்தை இழிவுபடுத்தும் வகையிலும், நாட்டின் பல்லின சமூகங்களுக்கு இடையிலான சிநேகபூர்வ நல்லிணக்கத்துக்குத் தீவிர பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலும் கருத்து வெளியிட்டதாகக் கூறி, இலங்கைத் தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் பொலிஸாரால் ஞானசார தேரருக்கு எதிராக இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு தொடர்பான நீண்ட மற்றும் விரிவான விசாரணைகளின் பின்னர், சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளில் ஞானசார தேரர் குற்றவாளி எனச் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதையடுத்து, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் அவருக்கு 9 மாதகால கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

**மேல் நீதிமன்றத் தீர்ப்பு**

கீழ் நீதிமன்றத்தின் அத்தீர்ப்பானது சட்டப்பூர்வமானது என்றும், அதில் தலையிட வேண்டிய அவசியம் இல்லை என்றும் இன்று சுட்டிக்காட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன, பிரதிவாதியின் மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்து தண்டனையை உறுதிப்படுத்தினார். இதனையடுத்து, தண்டனையை அமுல்படுத்துவதற்கான மேலதிக சட்ட நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன.

# ஸ்காபுறோ மற்றும் மார்க்கம் நகரங்களின் எல்லைக் கோடாக விளங்கும் ஸ்டீல்ஸ் அவென்யூ வீதி விரிவாக்கத்திற்கு ஒன்ராறியோ அரசும் நிதியுதவி வழங்குகிறது

ஒன்றாரியோ மாகாணத்தின் முக்கிய நகரங்களாக உள்ள ஸ்காபுறோ மற்றும் மார்க்கம் நகரங்களின் எல்லைக்
கோடாக விளங்கும் ஸ்டீல்ஸ் அவென்யூ வீதி விரிவாக்கத்திற்கு ஒன்ராறியோ அரசும்
நிதியுதவி வழங்குகிறது. நீண்ட காலமாக பல காரணங்களுக்காக இந்த வீதி விஸ்த்தரிப்பு என்பது லட்சக்கணக்கான மக்களுக்கு மிக அவசியமானதாக கருதப்பட்டு றொறன்ரோ நகரசபை. மார்க்கம் நகர சபை மற்றும் யோர்க் பிராந்திய நிர்வாக ஆகியவற்றுக்கு இடையில் கலந்துரையாடப்பெற்ற ஒன்றாக இருந்த இந்த விஸ்தரிப்பு திட்டம் தற்போது நிதர்சனமாகியுள்ளது என் முன்னாள் மார்க்கம் நகர சபையின் 7ம் வட்டார உறுப்பினரும் தற்போதை ஒனறாரியோ மாகாணத்தின் மார்க்கம்- தோர்ன்ஹில் தொகுதி உறுப்பினருமான லோகன் கணபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் இந்த செய்தியை அனைவரோடு பகிர்ந்து கொண்டுள்ளார். இவர் இந்த வீதி விஸ தரிப்பானது ரெப்ஸ்கொட் வீதிச் சந்தியிலிருந்து நைன்த் லைன் வீதி வரையிலுமான ஒன்றரை கிலோமீற்றம் தூரமுள்ள ஒரு பகுதியை உடன-டியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று லோகன் கணபதி அவர்களும் ஒன்றாரியோ அமைச்சர் றேமன்ட் சோ அவர்களும் சில மாதங்களாக ஒன்றாரியோஅரசாங்கத்தின் பல பிரிவுகளோடு நடத்திய கலந்துரையாடல் தற்போது நல்ல ஒரு செய்தியைத் தந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்

இதுபற்றி லோகன் கணபதி அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் ஸ்கார்பரோ வாழ் மக்களுக்கு இது குறுகிய பயண நேரம், குறைந்த போக்குவரத்து நெரிசல், பாதுகாப்பான மற்றும் சீரான வீதிகள் ஆகியவற்றைக் குறிப்பதோடு, குடும்பங்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், முதியவர்கள் மற்றும் உள்ளூர் வணிகர்களுக்கு சிறந்த போக்குவரத்து இணைப்புகளை வழங்கும். இந்த ஸ்டீல்ஸ் அவென்யூ ஈஸ்ட் வீதி விரிவாக்கமானது, ஸ்கார்பரோவை அதன் அண்டை சமூகங்களுடன் இணைக்கும் ஒரு பரபரப்பான வழித்தடத்தில் போக்குவரத்து ஓட்டத்தை மேம்படுத்த உதவப்போகிறது. இதன் மூலம் அன்றாடப் பயணமானது வாகன ஓட்டிகளுக்கும் பாதசாரிகளுக்கும் பல வசதிகளை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வீதி விஸ்தரிப்பு திட்டம் தொடர்பாக லோகன் கணபதி அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில், ”டாப்ஸ்காட் வீதி மற்றும் நைன்த் லைன் இடையேயான ஸ்டீல்ஸ் அவென்யூ கிழக்கு வீதியை விரிவுபடுத்துவதற்கானமொத்தச் செலவில் 90 சதவீதத்தை கனடிய மத்திய அரசாங்கமும் ஒன்றாரியோ அரசாங்கமும் பகிர்ந்து கொள்கின்றன என்பதை தெரிவிப்பதில் நான் பெருமையடைகிறேன்,” . அவர் மேலும் தெரிவிக்கையில், ”ஸ்கார்பரோ பகுதி மக்கள் பல ஆண்டுகளாக இந்த விஸ்தரிப்பு திட்டம் தொடர்பாக அனைத்து அரசியல் தலைவர்களிடத்திலும் வற்புறுத்தி வந்துள்ளனர், இப்போது நாங்கள் அதைச் செய்து முடிக்கிறோம். இதன் மூலம் பயண நேரம் குறையும், போக்குவரத்து நெரிசல் நீங்கும் மற்றும் எமது வாக்காளர்களின் வாழ்க்கை முறையிலும் நாளாந்த நடவடிக்கையிலும்பல மாற்றங்கள் ஏற்படும் என்றார்.

**Press Release**
June 25, 2026

## Steeles Avenue East Widening: Funding Secured to Get Shovels in the Ground



I am pleased to update the residents of Markham on a major step forward for the Steeles Avenue East widening project. The residents of Markham–Thornhill have waited a long time for this project — and after years of advocacy, we are finally getting it done.

This project will resolve a major traffic issue that has affected thousands of families in the East Markham, Scarbrough and Durham region. I have been advocating for this widening since I was first elected as a City of Markham Ward 7 Councillor representing southeast Markham.

Now, under the new Canada-Ontario Development Charge Reduction Program, Steeles Ave. East has been named for funding, with the provincial and federal governments stepping up to cover up to 90% of project costs.

The Steeles Avenue East widening, led by the City of Toronto in partnership with the Region of York, will reconstruct the 1.5 km segment of Steeles Avenue East between Tapscott Road and Ninth Line as a six-lane urban street with new sidewalks and protected cycling infrastructure. The City anticipates that construction will begin in 2027, pending completion of the detailed design and any necessary property acquisition; the schedule remains subject to change as design work continues.

In May 2012, I presented a motion at the City of Markham's Development Services Committee to restart the process of reconstructing Steeles Avenue between Markham Road and the York–Durham Line within three years, which Council approved in December. I continued to advocate for the project by meeting in November 2013 with Mayor Scarpitti, senior Markham staff, and Regional Chair Bill Fisch to stress its urgency.

A major breakthrough came on March 7, 2014, when I and councillor Raymond Cho organized a joint meeting with Markham, Toronto, and York Region officials that led to unanimous in-principle approval of a cost-sharing agreement to widen a 1.5 km section of Steeles Avenue East.

This progress was reinforced by formal approvals from York Region in June and Toronto City Council in July 2014. The City of Toronto began detailed design work in 2016, though progress was delayed between 2018 and 2023 due to technical challenges.

When I got elected as MPP with the support of Stouffville MPP Paul Calaendra, we continue to advocate for the steels avenue widening in provincial level


In June 2026, the project was recognized with funding support through the Canada–Ontario Development Charge Reduction Program.

This widening will mean smoother, safer traffic and a better quality of life for families across Markham, Scarborough, and Durham Region. I will continue working with the City of Toronto, the Region of York, and our Ward 7 Councillor to keep this project moving toward construction.

Best wishes,

N.K.Logan

Logan Kanapathi, MPP
Markham–Thornhill

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "இலங்கையின் மீன்பிடி அமைச்சர் சந்திரசேகர் அழைத்து வந்த என்.பி.பி கட்சியின் அடியாள்களே கூச்சலிட்டுக் காடைத்தனம் புரிந்தனர்"

## யாழ்ப்பாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏற்பட்ட அமளி குறித்து செல்வராஜா கஜேந்திரன் கருத்து




**- ந.லோகதயாளன்**

"யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் சந்திரசேகர் அழைத்து வந்த தேசிய மக்கள் சக்தியின் அடியாள்கள் காடைத்தனமாக கூச்சலிட்டு கூட்டத்தைக் குழப்பிக் கொண்டிருந்தார்கள். கரவெட்டி பிரதேச சபையினுடைய தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அங்கு கருத்து சொல்கின்றவர்களைக் காணொளி எடுத்து அச்சுறுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்." - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நடைபெற்ற குழப்பம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: "தெல்லிப்பழை வைத்தியசாலை புற்றுநோய் பிரிவு தரமுயர்த்துவது தொடர்பான விவகாரத்திலும், தையிட்டி விகாரை காணி விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமது கருத்துக்களை முன்வைத்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் குழப்பமடைந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை உரையாட விடாமல் தடுத்து தொடர்ச்சியாக குழப்பத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். தேசிய மக்கள் சக்தி அரசினுடைய தேவையை நிறைவு செய்வதற்காகவே அர்ச்சுனா இராமநாதனை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பயன்படுத்திக் கொண்டார்.

எனினும் அந்த விடயங்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உறுதியாக நின்று மக்களுடைய காணிகளைச் சுவீகரிக்க விடாமல் தடுத்துக் கொண்டிருந்த போது, பொதுமக்கள் அரங்கில் இருந்த தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் எழுந்து நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு எதிராகக் கூச்சலிடத் தொடங்கினார்கள். அவர்கள் அமைச்சர் சந்திரசேகர் அழைத்து வந்த தேசிய மக்கள் சக்தியின் அடியாள்கள்.

கிராமங்களிலே அடிதடி, வன்முறைகளில் ஈடுபடுகின்ற நபர்களே காடைத்தனமாகக் கூக்குரலிடுகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்கள். குறிப்பாக வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையினுடைய தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் எவ்வாறு அந்தக் கூட்டத்துக்கு வந்தார் என்பது தெரியாது. அவர் அமைச்சர் சந்திரசேகருடைய அடியாளாகவே கலந்துகொண்டிருந்தார்.

அவர் அங்கு கருத்துச் சொல்கின்றவர்களைக் காணொளி எடுத்து அச்சுறுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். ஊடகவியலாளர்களை வீடியோ எடுத்து அச்சுறுத்தினார். தங்களுடைய காணிகளை விடுவிக்குமாறு கோரி நின்ற அப்பாவிப் பொதுமக்களை வீடியோ எடுத்து அச்சுறுத்தியிருந்தார். அது மட்டும் அல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினுடைய பிரதிநிதியாக நான் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துச் சொல்ல முற்பட்டபோது எனக்கு முன்னால் வந்து நின்று என்னை சபை நடவடிக்கைகளைப் பார்க்க விடாமல் தடுத்துக் கொண்டு என்னைக் காணொளி எடுத்து அச்சுறுத்திக் கொண்டிருந்தார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றதில்லை. மக்கள் மத்தியில் எங்களுடைய கருத்துக்கள் செல்வது குறித்து தேசிய மக்கள் சக்தி அரசு அச்சப்படுகின்றது. தங்களுடைய இனவாத முகம் அம்பலப்படுவதை தடுக்கக் கருத்துச் சுதந்திரத்தை முடக்குவதற்கும், ஊடக சுதந்திரத்தை முடக்குவதற்கும், அங்கே வருகின்ற மக்களைத் தமது பிரச்சினைகளைக் கூறவிடாமல் அச்சுறுத்துகின்ற செயற்பாடுகளைச் சந்திரசேகர் தலைமையிலான இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இங்கே அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்." - என்றார்.

# கவிஞர் அ.ரமணி தேவி எழுதிய "தந்தியின் மேல் விழுந்த பூனைக்குட்டி" ஹைக்கூ நூல் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது



கடந்த 20ம் திகதி சனிக்கிழமையன்று மாலை சென்னை கோயம்பேடு எதிரேயுள்ள விக்டோரியா கார்டன்ஸ் தரைத்தளத்திலுள்ள கவிக்கோ அரங்கில் கவிஞர் அ.ரமணி தேவி எழுதிய "தந்தியின் மேல் விழுந்த பூனைக்குட்டி" ஹைக்கூ கவிதை நூல் வெளியீட்டு விழா இனிதே நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு ஓவியக்கவிஞர் அமுதபாரதி தலைமையேற்றார். ஒருங்கிணைப்பாளர் கவிஞர் மு.முருகேஷ் அனைவரையும் வரவேற்றார்.

ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியும் கவிஞருமான கவிஞர் அ.ரமணி தேவி எழுதிய "தந்தியின் மேல் விழுந்த பூனைக்குட்டி" எனும் ஹைக்கூ கவிதை நூலை கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் வெளியிட, கவிஞர் ஜெயபாஸ்கரன் பெற்றுக்கொண்டார்.

நூலினை வெளியிட்ட ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் பேசும்போது, "தனது வங்கிப் பணி ஓய்வுக்குப் பின்னரும், ஆர்வத்துடன் ஹைக்கூ கவிதைகளை எழுதி, அதனை நூலாகவும் வெளியிட்டுள்ள கவிஞர் அ.ரமணி தேவி, இந்நூலெங்கும் எழுதியுள்ள கவிதைகளைச் சுருக்கமாகவும், அதே நேரத்தில் செறிவாகவும், ஆழ்ந்த பொருள் பொதிந்ததாகவும் எழுதியுள்ள விதம் பாராட்டும்படி உள்ளது" என்று வாழ்த்தினார்.

நூலைப்பெற்றுக்கொண்ட கவிஞர் ஜெயபாஸ்கரன் பேசும்போது, "மூன்றே வரிகளில் இருப்பதினாலேயே ஹைக்கூ எழுதுவது எளிது என்று நினைக்கிறார்கள். அது தவறான புரிதலாகும். மூன்றே வரிகளில் காட்சியழகோடும் கவித்துவத்தோடும், இயற்கையையும் சமூகத்தையும் பாடுபொருளாக்கி எழுதுவது என்பது தொடர் பயிற்சியின் விளைவாகத்தான் கைகூடும். தொன்மைமிக்க நம் தமிழ் மொழியில் எம்மொழி கவிதை வடிவத்தையும் எழுத முடியும் என்பதற்கு சான்றே இந்த ஜப்பானிய கவிதை வடிவம். தனது முதல் நூலிலேயே மேற்கோளாகச் சொல்லத்தக்க பல நல்ல கவிதைகளை கவிஞர் அ.ரமணி தேவி எழுதியுள்ளார்" என்றார்.

நிகழ்வில், கவிஞர்கள் புதுகை ஆதீரா, அன்புத்தோழி ஜெயஸ்ரீ, அனுராதா சௌரிராஜன், சா.கா.பாரதி ராஜா, கா.பாபு சசிதரன், க.குணசேகரன், கு.அசோகன், ச.கௌரிசங்கர், திரைப்பட இயக்குநர் என்.குமார், பாடலாசிரியர் சங்கத்தலைவர் தமிழமுதன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இங்கு காணப்பெறும் படத்தில் 20ம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற "ஹைக்கூ முற்றம்" 12-ஆம் நிகழ்வில் கவிஞர் அ.ரமணி தேவி எழுதிய "தந்தியின் மேல் விழுந்த பூனைக்குட்டி" ஹைக்கூ நூலை கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் வெளியிட, கவிஞர் ஜெயபாஸ்கரன் பெற்றுக்கொண்டார். அருகில் நூலாசிரியர் அ.ரமணி தேவி, ஓவியக்கவிஞர் அமுதபாரதி, கவிஞர் மு.முருகேஷ், கவிஞர் ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சம்பந்தப்பட்ட சஹ்ரான் தங்கியிருந்த சங்கிரில்லா ஹோட்டல், அறை விவரம் மறைக்கப்பட்ட விடயம்

## புதிய விசாரணையை வலியுறுத்துகின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற சங்கிரில்லா ஹோட்டலில், தற்கொலை குண்டுதாரி சஹ்ரான் ஹாஷிம் தங்கியிருந்த 116ஆம் இலக்க அறையில் அவருக்கு முன்னர் தங்கியிருந்தவர்களின் விவரங்கள் மாத்திரம் மறைக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்த விவகாரம் குறித்து தற்போதைய அரசு தீவிரமாகத் தேடிப் பார்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: "உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற தினத்துக்கு முன்தினமான 2019 ஏப்ரல் 20ஆம் திகதி இரவில், சஹ்ரானும் அவருடன் இருந்த மற்றொரு நபரும் கொழும்பு சங்கிரில்லா ஹோட்டலின் 116ஆம் இலக்க அறைக்கு வந்து தங்கியுள்ளனர். மறுநாள் ஏப்ரல் 21ஆம் திகதி காலையிலேயே அவர்கள் இந்தக் கொடூர தாக்குதலை நடத்தியிருந்தார்கள்.

இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து, பாதுகாப்புத் தரப்பினரால் சங்கிரில்லா ஹோட்டல் அறைகளில் அதற்கு முந்தைய இரண்டு வார காலப்பகுதியில் தங்கியிருந்த அனைத்துப் பயணிகளினதும் விவரங்கள் மற்றும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

இருப்பினும், சஹ்ரான் தங்கியிருந்த 116ஆம் இலக்க அறையில், அவருக்கு முன்னர் தங்கியிருந்தவர்கள் யார் என்பது குறித்த தகவல்கள் மாத்திரம் எங்கும் பதியப்படவில்லை. எந்தவொரு விவரப் பதிவுகளும் இல்லாமல் ஒரு சர்வதேச ஹோட்டலில் யாருக்கு அவ்வாறு அறைகள் வழங்கப்பட முடியும்? மிகவும் செல்வாக்குமிக்க முக்கிய பிரமுகர்களுக்கு மாத்திரமே அவ்வாறான சலுகைகள் வழங்கப்பட முடியும்.



அப்படியானால், சஹ்ரான் வருவதற்கு முன்னர் அந்த அறையில் தங்கியிருந்த அந்த முக்கிய பிரமுகர்கள் யார்? இந்த விவரங்கள் அனைத்தும் ஏற்கனவே நீதிமன்ற வழக்கு விசாரணைகளின் போது வெளிவந்த உண்மைகளாகும்.

அத்துடன், சஹ்ரான் இருந்த அறையின் கதவைத் திறப்பதற்கு டிஜிட்டல் இலத்திரனியல் அட்டை ஒன்று விநியோகிக்கப்பட்டுள்ளதும், அதனைப் பயன்படுத்தி கதவு திறக்கப்பட்டுள்ளதும் தரவுகளில் பதிவாகி இருக்கின்றன. ஆனால், அந்த அறையில் அதற்கு முன் தங்கியிருந்த நபர் யார் என்பது விடுபட்டுள்ளது.

உலகில் ஹோட்டல் பதிவுகள் ஏதுமின்றி தங்கும் சலுகை மிக முக்கியமான சில உயர்மட்டப் பிரமுகர்களுக்கு மட்டுமே காணப்படுகின்றது. எனவே, அங்கு தங்கியிருந்தவர்கள் யார் என்பதை இந்த அரசு உடனடியாகத் தேடிப் பார்க்க வேண்டும். இவ்வாறான பல மறைக்கப்பட்ட உண்மைகள் தற்போதைய புதிய விசாரணைகளின் மூலம் வெளிவரும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்." - என்றார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சம்பந்தப்பட்ட சஹ்ரான் தங்கியிருந்த சங்கிரில்லா ஹோட்டல், அறை விவரம் மறைக்கப்பட்ட விடயம்

## புதிய விசாரணையை வலியுறுத்துகின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற சங்கிரில்லா ஹோட்டலில், தற்கொலை குண்டுதாரி சஹ்ரான் ஹாஷிம் தங்கியிருந்த 116ஆம் இலக்க அறையில் அவருக்கு முன்னர் தங்கியிருந்தவர்களின் விவரங்கள் மாத்திரம் மறைக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்த விவகாரம் குறித்து தற்போதைய அரசு தீவிரமாகத் தேடிப் பார்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: "உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற தினத்துக்கு முன்தினமான 2019 ஏப்ரல் 20ஆம் திகதி இரவில், சஹ்ரானும் அவருடன் இருந்த மற்றொரு நபரும் கொழும்பு சங்கிரில்லா ஹோட்டலின் 116ஆம் இலக்க அறைக்கு வந்து தங்கியுள்ளனர். மறுநாள் ஏப்ரல் 21ஆம் திகதி காலையிலேயே அவர்கள் இந்தக் கொடூர தாக்குதலை நடத்தியிருந்தார்கள்.

இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து, பாதுகாப்புத் தரப்பினரால் சங்கிரில்லா ஹோட்டல் அறைகளில் அதற்கு முந்தைய இரண்டு வார காலப்பகுதியில் தங்கியிருந்த அனைத்துப் பயணிகளினதும் விவரங்கள் மற்றும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

இருப்பினும், சஹ்ரான் தங்கியிருந்த 116ஆம் இலக்க அறையில், அவருக்கு முன்னர் தங்கியிருந்தவர்கள் யார் என்பது குறித்த தகவல்கள் மாத்திரம் எங்கும் பதியப்படவில்லை. எந்தவொரு விவரப் பதிவுகளும் இல்லாமல் ஒரு சர்வதேச ஹோட்டலில் யாருக்கு அவ்வாறு அறைகள் வழங்கப்பட முடியும்? மிகவும் செல்வாக்குமிக்க முக்கிய பிரமுகர்களுக்கு மாத்திரமே அவ்வாறான சலுகைகள் வழங்கப்பட முடியும்.



அப்படியானால், சஹ்ரான் வருவதற்கு முன்னர் அந்த அறையில் தங்கியிருந்த அந்த முக்கிய பிரமுகர்கள் யார்? இந்த விவரங்கள் அனைத்தும் ஏற்கனவே நீதிமன்ற வழக்கு விசாரணைகளின் போது வெளிவந்த உண்மைகளாகும்.

அத்துடன், சஹ்ரான் இருந்த அறையின் கதவைத் திறப்பதற்கு டிஜிட்டல் இலத்திரனியல் அட்டை ஒன்று வினியோகிக்கப்பட்டுள்ளதும், அதனைப் பயன்படுத்தி கதவு திறக்கப்பட்டுள்ளதும் தரவுகளில் பதிவாகி இருக்கின்றன. ஆனால், அந்த அறையில் அதற்கு முன் தங்கியிருந்த நபர் யார் என்பது விடுபட்டுள்ளது.

உலகில் ஹோட்டல் பதிவுகள் ஏதுமின்றி தங்கும் சலுகை மிக முக்கியமான சில உயர்மட்டப் பிரமுகர்களுக்கு மட்டுமே காணப்படுகின்றது. எனவே, அங்கு தங்கியிருந்தவர்கள் யார் என்பதை இந்த அரசு உடனடியாகத் தேடிப் பார்க்க வேண்டும். இவ்வாறான பல மறைக்கப்பட்ட உண்மைகள் தற்போதைய புதிய விசாரணைகளின் மூலம் வெளிவரும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்." - என்றார்.



# யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியில் மேலும் 7 எலும்புக்கூடுகள்!

## ஒரே நேர்கோட்டில் மூன்று எலும்புக்கூடுகள். அகழ்வாய்வில் தொடர்ந்து வெளிவரும் அதிர்ச்சி தரும் ஆதாரங்கள்!

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் யூன் 22ம் திகதி அன்றைய அகழ்வுப் பணிகளின் போது, புதிதாக 7 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் மூன்று என்புத் தொகுதிகள் ஒரே நேர்க்கோட்டில் புதைக்கப்பட்டவாறு கண்டெடுக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான மூன்றாம் கட்ட தடயவியல் அகழ்வாய்வுப் பணிகளின் 31ஆம் நாள் அகழ்வுப் பணிகள் யூன் 22ம் திகதி அன்று இடம்பெற்றன.

யூன் 22ம் திகதி அன்றையதின அகழ்வாராய்ச்சியின் போது புதிதாக அடையாளம் காணப்பட்ட 7 மனித என்புத் தொகுதிகளும் முறைப்படி சுத்தம் செய்யப்பட்டு இலக்கமிடப்பட்டுள்ளன. இதில் 3 மனித என்புத் தொகுதிகள் ஒரே நேரில் (ஒரே நேர்கோட்டில்) புதைக்கப்பட்டவாறு காணப்படுகின்றன.

அத்துடன், ஏற்கனவே அடையாளம் இடப்பட்டிருந்த என்புத் தொகுதிகளில் மேலும் 13 மனித என்புத் தொகுதிகள் அன்று முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.



இதன்படி, செம்மணி மனிதப் புதைகுழியின் தடயவியல் அகழ்வாய்வுத்தளம் ஒன்று மற்றும் இரண்டு ஆகிய இரண்டு பிரிவுகளிலிருந்தும், ஒட்டுமொத்தமாக இதுவரை 412 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவற்றில் 390 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெரும் போர்க்களம் மாறிய இலங்கை நாடாளுமன்றம்!

## செங்கோலைக் கைப்பற்ற எதிர்க்கட்சி முயன்றதால் மன்றத்தின் நடவடிக்கைகள் அவசரமாக ஒத்திவைப்பு!

இலங்கை நாடாளுமன்றத்தில் யூன் 23ம் திகதி அன்று ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையே ஏற்பட்ட கடுமையான வாக்குவாதம், கூச்சல் குழப்பம் மற்றும் தள்ளுமுள்ளு காரணமாகச் சபை நடவடிக்கைகள் சபாநாயகரால் 10 நிமிடங்களுக்கு அவசரமாக ஒத்திவைக்கப்பட்டதால் நாடாளுமன்ற வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நாட்டின் தற்போதைய முக்கிய கட்டமைப்புப் பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அவசர விவாதம் ஒன்றை நடத்துவதற்கு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழுவொன்று சபாநாயகரிடம் முறைப்படி பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தது.

எனினும், நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக இந்த அவசர விவாதக் கோரிக்கையை நிராகரித்த சபாநாயகர், இதற்காக நாடாளுமன்றத்தில் தற்சமயம் நேரம் ஒதுக்க முடியாது எனத் திட்டவட்டமாக அறிவித்தார். சபாநாயகரின் இந்த முடிவுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையின் நடுவணைத்துக்கு வந்து கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதனைத் தொடர்ந்து ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையே கடுமையான காரசாரமான வார்த்தைப் பிரயோகங்களும், கூச்சல் குழப்பமும் ஏற்பட்டன. இதன் உச்சக்கட்டமாக, ஆவேசமடைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் சபாநாயகரின் ஆசனத்தை நோக்கி முன்னேறி, நாடாளுமன்றத்தின் இறையாண்மையின் சின்னமான செங்கோலைக் கைப்பற்றவும் முயன்றனர்.



இதனை ஆளும்கட்சி உறுப்பினர்கள் தடுக்க முற்பட்டதால் இருதரப்புக்கும் இடையே சபைக்குள் பெரும் தள்ளுமுள்ளு நிலவியதுடன், சபையே போர்க்களமாக மாறியது.

சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து சீராக முன்னெடுத்துச் செல்ல முடியாத அளவுக்குப் பதற்றமான சூழல் நிலவியதை அடுத்து, நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில் சபாநாயகர் நாடாளுமன்றத்தை 10 நிமிடங்களுக்குத் தற்காலிகமாக ஒத்திவைப்பதாக அறிவித்துத் தனது ஆசனத்தை விட்டு எழுந்து சென்றார்.

இந்தச் சம்பவம் நாடாளுமன்ற வட்டாரத்தில் யூன் 23ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வவுனியா நகர மேயர் மற்றும் சாவகச்சேரி பிரதேச உப தவிசாளர் ஆகியோர் வடக்கு ஆளுநரால் அதிரடியாகப் பதவி நீக்கம்!



வவுனியா மாநகர சபையின் மேயர் சு.காண்டீபன் மற்றும் சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் ஞா.கிசோர் ஆகியோர் தங்களது பதவிகளில் இருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிரடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனினால் இதற்கான உத்தியோகபூர்வ உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளினதும் நடத்தை மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பாகப் பல்வேறு தரப்பினராலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இது குறித்து முறையான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக, ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையி-ல் விசேட விசாரணை ஆணைக்குழு ஒன்றை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நியமித்திருந்தார்.

அதன்படி, குறித்த விசாரணை ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட தீர்க்கமான விசாரணைகளின் இறுதி அறிக்கை மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய பரிந்துரைகளுக்கு அமைவாகவே, இவர்கள் இருவரும் பதவிகளில் இருந்தும், உறுப்பினர் நிலைகளில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாநகர சபையின் மேயர் சு.காண்டீபன் மற்றும் சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் ஞா.கிசோர் ஆகியோரது பதவி நீக்கம் தொடர்பான ஆளுநரின் விசேட கட்டளைகள் அடங்கிய உத்தியோகபூர்வ வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆளுநரின் இந்த அதிரடி நடவடிக்கை வடக்கு மாகாண உள்ளூராட்சி அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# செம்மணிக்கு வந்த நீதியமைச்சர் சொல்லிச் சென்ற செய்திகளின் பின்னால்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



கடந்த வாரம் அநுர அமைச்சரவையின் நீதி அமைச்சர் செம்மணிக்கு வருகை தந்திருந்தார். அதன் பின் அவர் பாதிக்கப்பட்ட மக்களை அதாவது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடிக் கொண்டிருக்கும் அமைப்புகளை சேர்ந்தவர்களை சந்தித்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதை நோக்கமாகக் கொண்டு பின்வரும் விடயங்களைக் கதைத்தார். "அவர்களுக்கு உரிய உதவிகள் கிடைக்கும்". "உதவி கேட்டவர்களுக்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படும்" "செம்மணிப் புதைகுழி தொடர்பில் படைத்தரப்பின் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவர்களை அரசாங்கம் நீதியின் முன் நிறுத்தும்" "இதற்கு முன்னிருந்த அரசாங்கங்களை போலன்றி இந்த அரசாங்கம் செம்மணிப் புதை குழியை அகழ்வதற்கு வேண்டிய எல்லாச் சட்ட ஏற்பாடுகளையும் நிதி ஏற்பாடுகளையும் செய்து வருகிறது" "செம்மணியில் உள்ள எலும்புக் கூடுகளை அடையாளம் காண்பதற்கு இரண்டு தடவைகள் பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் பொதுமக்கள் போதிய அளவில் அங்கே வரவில்லை" "மரபணுப் பரிசோதனை எனப்படுவது மனிதப் புதை குழிக்கான நீதி விசாரணைப் பொறிமுறையில் இறுதிக்கட்டத்தில் செய்யப்படுவது" என்றும் தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதை குழியானது தென்னாசியாவின் முதலாவது பெரிய மனிதப் புதை குழியா? ஆசியாவின் இரண்டாவது பெரிய மனிதப் புதை குழியா? ஆசியாவில் அதிக தொகை மனிதப் புதை குழிகளைக் கொண்ட இடம் கம்பூச்சியா. அங்கே கிட்டத்தட்ட இருபதாயிரம் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை ஒரே இனத்துக்குள் நடந்த கொலைகள்தான். கமரூச் இயக்கத்தின் தலைவராகிய போல்பொட் தன்னுடைய சொந்த மக்களையே லட்சக்கணத்தில் கொன்று குவித்தார்.

கம்பூச்சிய மனிதப் புதை குழிகள்தான் ஆசியாவின் மிகப்பெரிய மனிதப் புதைக்குழிகளாகக் கணிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு, இந்த மாதத்தோடு செம்மணி மனிதப் புதைகுழி ஆசியாவின் இரண்டாவது பெரிய மனிதப் புதை குழியாகக் கணிக்கப்படுமா? இதில் துயரமான ஒற்றுமை என்னவென்றால் இரண்டுமே பௌத்தம் பயிலப்படும் நாடுகள்.

கடந்த வாரம் நீதி அமைச்சர் செம்மணிக்கு வருகை தந்திருந்தார். அதன் பின் அவர் பாதிக்கப்பட்ட மக்களை அதாவது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடிக் கொண்டிருக்கும் அமைப்புகளை சேர்ந்தவர்களை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது அவர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதை நோக்கமாகக் கொண்டு பின்வரும் விடயங்களைக் கதைத்தார்.

முதலாவதாக, அவர்களுக்கு உரிய உதவிகள் கிடைக்கும் என்று கூறினார். உதவி கேட்டவர்களுக்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் சொன்னார். இரண்டாவதாக செம்மணிப் புதைகுழி தொடர்பில் படைத்தரப்பின் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவர்களை அரசாங்கம் நீதியின் முன் நிறுத்தும் என்றும் உறுதியளித்தார். மூன்றாவதாக இதற்கு முன்னிருந்த அரசாங்கங்களை போலன்றி இந்த அரசாங்கம் செம்மணிப் புதை குழியை அகழ்வதற்கு வேண்டிய எல்லாச் சட்ட ஏற்பாடுகளையும் நிதி ஏற்பாடுகளையும் செய்து வருகிறது என்றும் தெரிவித்தார். நாலாவதாக செம்மணியில் உள்ள எலும்புக் கூடுகளை அடையாளம் காண்பதற்கு இரண்டு தடவைகள் பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் பொதுமக்கள் போதிய அளவில் அங்கே வரவில்லை என்பதையும் தெரிவித்தார். ஐந்தாவதாக மரபணுப் பரிசோதனை எனப்படுவது மனிதப் புதை குழிக்கான நீதி விசாரணைப் பொறிமுறையில் இறுதிக்கட்டத்தில் செய்யப்படுவது என்றும் தெரிவித்தார்.

அரசாங்கம் செம்மணி விவகாரத்தைத் தனக்குச் சாதகமாக கட்டமைக்கும் விதத்தில் கையாண்டு வருகிறது என்பதை அது காட்டுகிறது. உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை தொடர்பான நம்பிக்கையை உலக அளவில் பலப்படுத்துவதற்கு இந்த விடயத்தை அரசாங்கம் கையாண்டு வருகிறது என்பது தெரிகிறது. தமிழ் மக்கள் அனைத்துலகைப் பொறிமுறை ஒன்றைக் கேட்கின்றார்கள். நீதி அமைச்சர் செம்மணிக்கு வந்தபோது அங்கே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட, பாதிக்கப்பட்ட மக்களும் அதைத்தான் கேட்டார்கள். பல மாதங்களுக்கு முன்பு ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் அங்கு வந்த போதும் அதைத்தான் கேட்டார்கள். ஆனால் அரசாங்கம் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை பலப்படுத்தும் விதத்தில் விடயங்களைக் கையாண்டு வருகிறது என்பது தெரிகிறது.ஐநாவும் "தேசியத் தன்மை" மிக்க உள்நாட்டுப் பொறிமுறையை அனைத்துலக உதவிகளின் மூலம் பலப்படுத்துவது என்றுதான் சிந்திப்பது தெரிகிறது.



நீதி அமைச்சர் யாழ்ப்பாணத்தில் தெரிவித்த கருத்துக்களில் தமிழ் நோக்கு நிலையில் முக்கியமானது எதுவென்றால், செம்மணியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளை அடையாளம் காண்பதற்கு இரண்டு தடவைகள் அழைக்கப்பட்டதாகத் தெரிவித்தமை. அப்படித்தான் கொக்குத்தொடுவாய் புதை குழியின் விடயத்திலும் மக்கள் அந்த எலும்புக்கூடுகளை அடையாளம் காணவில்லை என்று ஏற்கனவே காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் தெரிவித்திருந்தது.

செம்மணியில் அகழ்ந்தெடுக்கப்படும் எலும்புக்கூடுகளை ஊடகவியலாளர்கள் ஒவ்வொரு நாளும் வெளி உலகத்துக்கு காட்டி கொண்டிருக்கிறார்கள். அது ஓர் உணர்ச்சிகரமான அரசியல் விவகாரமாக தமிழ் பரப்புக்குள் நொதித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த எலும்புக் கூடுகளில் தங்களுடைய உறவினர்கள் இருக்கலாம் என்று அதை அடையாளம் காண்பதற்கு பொதுமக்கள் ஏன் அதிக தொகையில் போகவில்லை?அல்லது அவ்வாறு போக வேண்டியவர்களை ஒருங்கிணைப்பது யார்?

செம்மணியில் குழந்தைகளின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் விளையாடும் பொம்மைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கொத்து கொத்தாக புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கத்தக்க விதத்தில் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. தாயும் பிள்ளையும் என்று சந்தேகிக்கப்படத்தக்க விதத்தில் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அப்படியென்றால் அங்கே தங்களுடைய உறவினர்கள் புதைக்கப்பட்டிருந்திருக்கலாம் என்று சந்தேகப்படும் தமிழ் மக்களை அங்கு வருமாறு அழைத்தபோது, ஏன் தமிழ் மக்கள் அதிக தொகையில் வரவில்லை?

யாருக்கெல்லாம் கொல்லப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் உடல்கள் கிடைக்கவில்லையோ, யாருடைய உறவினர்கள் குழந்தைகளோடு காணாமல் ஆக்கப்பட்டார்களோ, அல்லது யாருடைய உறவினர்கள் குடும்பமாக காணாமல் ஆக்கப்பட்டார்களோ, அல்லது யாருடைய உறவினர்களின் உடல்கள் கிடைக்கவில்லையோ, அவர்கள் அனைவரும் அங்கே வந்தவர்களா? அவர்களை யார் அழைத்துக் கொண்டு வருவது?

எலும்புக்கூடுகள் பேசாது. அவற்றின் மரபணுக்கள்தான் பேசும். எலும்புக்கூடுகளை அடையாளம் காணமுடியாது. ஆனால் மரபணுக்களை ஒப்பு நோக்கலாம். எலும்புக்கூடுகளோடு கிடைக்கும் இதுவரை உக்காத பொருட்களை வைத்தும் ஓரளவுக்கு அங்கு புதைக்கப்பட்டவர்களை அடையாளம் காண முயற்சிக்கலாம். எனவே இந்த விடயத்தில் உலகளாவிய அனுபவங்களை கற்றுக்கொண்டு அதற்கு வேண்டிய விஞ்ஞான பூர்வமான அணுகுமுறைகளை தமிழ்த் தரப்பு முன்னெடுக்க வேண்டும். யார் அதைச் செய்வது?

செம்மணியில் புதை குழிகள் முதலில் திறக்கப்பட்டதற்கு காரணம், சோமவன்ச ராஜபக்ஷ என்ற ஒரு படை ஆள்தான். இரண்டாவது தடவை அது திறக்கப்பட காரணம் இயற்கையானது. சித்துப்பாத்தி மயானத்தில் மின்தகன மேடை அமைப்பதற்காக அத்திவாரம் கட்டுவதற்கு நிலத்தை அகழ்ந்தபோது எலும்புக்கூடுகள் மேலெழுந்தன. அதாவது இயற்கை தமிழ் மக்களுக்கு ஒரு வாய்ப்பைத் திறந்து விட்டிருக்கிறது. ஆனால் அதைத் தமிழ் மக்கள் பயன்படுத்துகிறார்களா?

சோமவன்ச ராஜபக்சே ஒரு முக்கிய துருப்புச் சீட்டு. படைத்தரப்பிலிருந்து ஒருவர் அவ்வாறு சாட்சியம் கூறுகிறார். பல ஆண்டுகளாக அவர் சிறையில் இருக்கிறார். அவருடைய மனைவி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு கடிதங்கள் எழுதியிருக்கிறார். 38 ஆண்டுகால போரில் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் அவ்வாறு தமிழ் மக்களுக்கு சாதகமாகச் சாட்சி கூறுவது மிக அரிதான ஒரு புறநடை. ஆனால் தமிழ் மக்கள் எந்த அளவுக்கு அதனைச் சட்டரீதியாகக் கையாண்டிருக்கிறார்கள்?

எனவே, செம்மணிப் புதைக்குழி தமிழ் கட்சிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் மட்டுமல்ல,தமிழ் சட்டத்தரணிகளுக்கும் சட்ட செயற்பாட்டாளர்களுக்கும் புதிய வாய்ப்புகளை திறந்து வைத்திருக்கிறது. நினைவு கூர்தல்போல புதைகுழிகளும் உணர்ச்சிகரமான விடையப் பரப்புகள்தான். ஆனால் அந்த உணர்ச்சிகரமான உளவியல் சூழலை நீதிக்கான போராட்டத்தின் உந்து விசையாக யார் மாற்றுவது?

சிங்கள மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஆகிய, மறைந்த, சுனிலா அபயசேகர பல ஆண்டுகளுக்கு முன் "சண்டே டைம்ஸ்" பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலை இங்கே நினைவூட்ட வேண்டும். அது மாத்தளை வைத்தியசாலைக்கு அருகே மனிதப் புதை குழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருந்த காலம். சுனிலா தனது நேர்காணலில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியிருந்தார். மாத்தளைப் புதைகுழி கிண்டப்படுகையில், அதை நோக்கிச் சிங்கள மக்கள் திரண்டு வரவில்லை. இதுவே லத்தீன் அமெரிக்காவாக இருந்திருந்தால், மனிதப் புதைக்குழி கிண்டப்படுகையில் பொதுமக்கள் குறிப்பாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அந்த இடத்தை சூழ்ந்து காணப்படுவார்கள். அந்த இடத்தை நோக்கி திரண்டு வருவார்கள்" என்ற பொருள்பட சுனிலா கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதைத்தான் வேறு வார்த்தைகளில் வவுனியாவில் நடந்த ஒரு கருத்தரங்கில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருந்தவரும், மனித உரிமைச் செயற்பாட்டாளருமான கலாநிதி விஜயதிலக "தென்னிலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதை மறக்கப்பட்ட ஒரு கதை" என்று கூறினார்.

மாத்தளைப் புதை குழியை நோக்கிச் சிங்கள மக்கள் வரவில்லை. செம்மணியில் எலும்புகளை அடையாளம் காண்பதற்கு பொதுமக்கள் அழைக்கப்பட்டபோது மிகச்சிறிய எண்ணிக்கையானவர்களே அங்கே வந்திருந்தார்கள். நீதி அமைச்சர் கூறுகிறார், இரண்டு தடவைகள் அழைக்கப்பட்ட போதும் பொதுமக்கள் வரவில்லை என்று.செம்மணி ஆசியாவின் இரண்டாவது பெரிய புதைக் குழியா என்ற கேள்வி வலிமையாக மேலேழும் ஒரு காலகட்டத்தில், நீதிக்காகப் போராடும் தமிழ்மக்கள் செய்ய வேண்டியது என்ன?

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அதிர்ச்சிகளை வெளிக்காட்டும் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்!

## சோமரத்ன ராஜபக்சவை பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தி உண்மைகளை வெளிப்படுத்தும்படி ரவிகரன் எம்.பி வலியுறுத்து



யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பாக இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவை பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தி, உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு உரிய வடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் 23.05.2026 செவ்வாய்க்கிழமை அன்று உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் தொடர்ந்து தனது உரையில் கருத்துத் தெரிவிக்கையில், "யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப்புதைகுழியானது தற்போது நாட்டிலே பாரிய மனிதப்புதைகுழியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. செம்மணி மனிதப்புதைகுழியிலிருந்து இதுவை-ரயில் 412 எலும்புக்கூடுகள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 390 எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக சிறார்கள், பெண்கள், ஆண்கள், முதியோரென பலதரப் பட்டவர்களுடைய எலும்புக்கூடுகளும் தொடர்ச்சியாக மீட்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் கடந்தவாரம் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் சென்று பார்வையிட்டுள்ளதுடன்,



இந்த புதைகுழிவிவகாரம் தொடர்பில் உரிய விசார-ணைகள் முன்னெடுக்கப் படுமெ-னவும் உறுதியுரைத்துள்ளார். அந்தவகையில் செம்மணி மன-ிதப் புதைகுழி விவகாரத்திற்கு நீதிகிடைக்க வேண்டுமென்ற பெருத்த எதிர்பார்புடன் இருக்கும் பாதிக்கப்பட்ட எமது தமிழ்மக்களுக்கு நீதி அமைச்சரின் இந்தக் கருத்து நம்பிக் கைதருவதாக அமைந்துள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி குமாரசுவாமி படுகொலைசெய்யப்பட்ட விவகாரத்தில் பிரதான குற்றவாளியான இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவிற்கு நீதிமன்றினால் தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட பிற்பாடு, குறித்த இரணுவ லான்ஸ்கோப்ரல் செம்மணியில் படையினரால் 300 - 400 வரையான பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருப்பதாக தகவல்களை வெளிப்படுத்தியிருந்தார்.

அவருடைய தகவல்களின் அடிப்படையில் அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் 15 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக் கப்பட்டுள்ளன. அதனையடுத்து சந்திரிக்கா குமாரதுங்க அரசு இந்த புதைகுழி விசாரணையை கிடப்பில் போட்டிருந்தது.

தற்போது செம்மணி மனிதப்புதைகுழி அடையாளங்காணப்பட்டு, மீண்டும் அகழ்வாய்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாக பன்னாட்டு விசாரணையாளர்கள் முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு தயாராக இருப்பதாக கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் தனது மனைவி மூலம் ஜனாதிபதிக்கு சோமரத்ன ராஜபக்ச கடிதமொன்றினை எழுதியிருந்தார்.

மேலும் அக்கடிதத்தில் செம்மணியைத் தவிர, அரியாலை, கொழும்புத்துறை பகுதிகளிலும் இராணுவத்தினரால் சடலங்கள் புதைக்கப்பட்ட தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆகவே செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சோமரத்தின ராஜபக்சவிடம் பன்னாட்டு விசாரணைகளை மேற்கொண்டு உண்மைகள் வெளிக்கொணரப்படவேண்டும். அதுகுறித்து கூடுதல் கவனம் செலுத்தப் படவேண்டுமெனத் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் குரும்பசிட்டியில் தனியார் காணிகளில் அமைந்துள்ள இராணுவ விவசாய பண்ணைக்கு புதிய பெயர் பலகை நாட்டும் இலங்கை இராணுவம்



யாழ்ப்பாணம், வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிக்குள் காணப்படும் இராணுவத்தின் விவசாய பண்ணைக்கு புதிய பெயர் பலகை நாட்டும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

வலி. வடக்கில் இருந்து சுமார் 36 வருடங்களுக்கு மேலாக தனியார் காணிகளில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள நிலையில், தமது காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இந்நிலையில், குரும்பசிட்டி பகுதியில் உள்ள தனியார் காணிகளில் இராணுவத்தினர் நீண்ட காலமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பகுதியை இராணுவத்தினரின் விவசாய பண்ணை பகுதியாக அறிவித்து பெயர் பலகை நாட்டும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டு உள்ளமை, அப்பகுதி மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

"மக்களின் காணி மக்களுக்கே..." என அரசாங்கம் கூறிவரும் நிலையில், வலி.வடக்கில் காணி விடுவிப்பு தொடர்பில் ஆராய்வதற்கு பாதுகாப்பு பிரதி அமைச்சர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தந்து ஆராய்ந்து சென்றுள்ள நிலையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ள பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்ட கலந்துரையிடலில் காணி விடுவிப்பு தொடர்பில் முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டு, காணி உரிமையாளர்களுக்கு சாதகமான பதில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தினர் தமது விவசாய பண்ணைக்கு பெயர் பலகை நாட்டும் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, வசாவிளான் இராணுவ வைத்தியசாலை கட்டுமானம் மற்றும் பருத்தித்துறை - கீரிமலை வீதியில் புதிதாக கட்டப்படும் இராணுவத்தினரின் சிற்றுண்டி சாலை கட்டுமானம் ஆகியவற்றை உடனடியாக நிறுத்துமாறு வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் யாழ்.மாவட்ட இராணுவ தளபதிக்கு எழுத்து மூல அறிவித்தல் அனுப்பியுள்ள நிலையிலும் குறித்த கட்டுமான பணிகள் தடையின்றி முழு உத்வேகத்துடன் நடைபெறுவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது மரபணுக்களைச் சேகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என சட்டத்தரணி ரனித்தா குற்றச்சாட்டு



மரபணு தொடர்பான விடயத்தில், இதுவரை காலமும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகமோ அல்லது ஏனைய அரச நிறுவனங்களோ காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்களின் மரபணு மாதிரிகளைச் சேகரித்து, அதனைப் பாதுகாக்கும் செயற்பாடுகள் எதனையும் முன்னெடுக்கவில்லை என்று செம்மணி புதைகுழி வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி ஞா. ரனித்தா தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்ந்து எடுக்கப்படும் மனித என்புத் தொகுதிகள் மீதான மரபணுப் பரிசோதனைகள் மற்றும் அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "அடையாளம் காணப்படும் என்புத் தொகுதிகளை நிலத்திலிருந்து அகழ்ந்து எடுப்பது என்பது முதற்கட்டத் தனித்துவமான ஒரு செயற்பாடாகும். முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியிலும் முதற்கட்டமாக என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டன. அதன் பிற்பாடு, அந்த என்பு மாதிரிகளை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்வது என்பது இரண்டாவது நடவடிக்கையாகக் காணப்படுகின்றது.

இந்த இரண்டாவது நடவடிக்கையின் போதே அகழ்ந்து எடுக்கப்பட்ட என்புத் தொகுதிகள் முழுமையாக ஆராயப்பட்டு, அந்த மனிதர்களின் வயது, பாலினம் மற்றும் அவர்களின் இறப்புக்கான துல்லியமான காரணங்கள் கண்டுபிடிக்கப்படும். அத்துடன், அகழ்ந்து எடுக்கப்படும் என்புத் தொகுதிகளினுடைய கால எல்லை பற்றி தொல்லியல் திணைக்களத்தால் அறிவியல் அறிக்கை ஒன்றும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இவை இரண்டும் சமர்ப்பிக்கப்பட்டதன் பிற்பாடு, மூன்றாவது கட்டமாகவே காணாமல்போன உறவுகள் தொடர்பானத் தேடுதல் விவகாரங்கள் ஆரம்பிக்கப்படும். யாராவது தங்களுடைய உறவினர்கள் குறிப்பிட்ட காலத்தில் காணாமல் போனதாகவோ அல்லது கைது செய்யப்பட்டதன் பிற்பாடு இருப்பிடம் தெரியவில்லை என்றோ முறைப்பாடுகளை வழங்கியிருந்தால், தொல்லியல் திணைக்களம் கணித்துள்ள காலப்பகுதியோடு அந்தத் தரவுகளை ஒப்பிட்டு, பாதிக்கப்பட்ட உறவினர்களின் மரபணு மாதிரிகளை ஆய்வு செய்ய வேண்டிய சட்டத் தேவைப்பாடு உள்ளது.

ஏற்கனவே கொக்குத்தொடுவாயிலும் அந்த விடயங்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டு, தற்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அது தொடர்பாக நீதிமன்றத்திடம் அறிக்கையிடுமாறு கூறப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கை ஒரு சிறந்த முன் உதாரணமாகக் கொண்டுதான், நாட்டில் பதிவாகி வரும் ஏனைய புதைகுழி வழக்குகளின் சட்டப் பிரச்சினைகளும் கையாளப்படும். இதுவே சர்வதேச நியதிகளிலும் பின்பற்றப்படுகின்ற வழக்கமான நடைமுறையாகும்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக மரபணு தொடர்பான விடயத்தில், இதுவரை காலமும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகமோ அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களோ காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்களின் மரபணுக்களைச் சேகரித்து, அதனைப் பாதுகாக்கும் காப்பகம் எதனையும் இதுவரை உருவாக்கவில்லை.

இனிவரும் காலங்களிலாவது காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்களின் மரபணுவைச் சேகரித்துப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமாக இருந்தால், அதனைப் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் ஒப்புதலோடு மிக இலகுவாக முன்னெடுக்க முடியும். எனினும், இதற்கு அரசினுடைய முழுமையான இராஜதந்திர ஒத்துழைப்பும், தடயவியல் நிபுணர்களுடைய சர்வதேச அளவிலான உதவியும் அவசியமாகக் காணப்படுகின்றது.

மனிதப் புதைகுழி விவகாரத்தில் அடுத்தகட்டமாகச் சட்டப்பூர்வமாக எவற்றினைச் செய்ய வேண்டும் என்பதை நீதிமன்றமும், அகழ்வுப் பணிகளில் களத்தில் முன்னிலையாகும் நிபுணர்களுமே தங்களின் அறிவியல் கருத்துக்கள் மூலம் நீதிமன்றத்துக்குத் தெளிவுபடுத்துவார்கள். அதனடிப்படையிலேயே நீதிமன்றம் இறுதித் தீர்மானத்தை எடுக்கும்." - என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# மட்டக்களப்பில் உணவக முகாமையாளரது மோட்டார் சைக்கிளைத் திருடியவன் 5 மணி நேரத்தில் கைது



மட்டக்களப்பு நகரில் பிரபலமான உணவகம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 6 இலச்சத்து 77 ஆயிரம் ரூபா மோட்டார் சைக்கிள் ஒன்றை 20ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு திருடிச் சென்ற திருடன் ஒருவரை சிசிரி கமரா மூலம் 5 மணித்தியாலயத்தில் கைது செய்துள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த உணவகத்தில் கடமையாற்றும் முகாமையாளர் புதிதாக வாங்கிய மோட்டார் சைக்கிளை சம்பவ தினமான அன்றைய தினம் உணவகத்தின் முன்னால் உள்ள வாகன தரிப்பிடத்தில் நிறுத்திவிட்டு கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர் மதிய வேளையில் மோட்டார் சைக்கிளை பார்த்தபோது திருட்டு போயுள்ளது தெரிய வந்துள்ளதையடுத்து பொலிசாருக்கு தெரியப்படுத்தினர்.

இதனை தொடர்ந்து மட்டு தலைமையக பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி கஜநாயக்க தலைமையில் பொலிஸ் சாஜன் இலகமே, ரகுமான் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் உணவகத்தில் உள்ள சிசிரி கமராவில் பதிவாகியுள்ள திருடனை அடையாளம் கண்டு கொண்ட பொலிசார் குறித்த திருடனை மாலை 6.00 மணியளவில் கைது செய்ததுடன் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளையும் மீட்டனர்.

குறித்த திருடன் நகரில் ஏற்கெனவே சைக்கிள்களை திருடி வந்துள்ளதாகவும் ஏற்கனவே குற்றங்களைப் புரிந்தவர் எனவும் எனவே இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வானது காலை 8 மணிக்கு கல்லூரி முதல்வரும் பாராளுமன்ற செயலாளர் நாயகமுமான அருட் சகோதரி மரிய வசந்தி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி தெற்கு கல்வி வலய சமூக விஞ்ஞான உதவிக்கல்வி பணிப்பாளர் து. ஜீவானந்தனும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி தெற்கு கல்வி வலய சமூக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் ஜெயரத்தினம் நிசாகரும், கௌரவ விருந்தினராக பழைய மாணவி சதீசன் பியந்தினியும் கலந்து சிறப்பித்தனர்.



பாராளுமன்ற அமர்வின் போது சபாநாயகராக செல்வி ஜோ சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டார். பிரதமராக செல்வி ச.புகழ்செல்வியும் குழுக்களின், தலைவராக சு.சுவாதியும் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்து அமைச்சர்களால் பாடசாலையினதும் மாணவர்களும் முன்னேற்றத்திற்கான பல்வேறு பிரேரனைகள் முன்வைக்கப்பட்டு சபையால் அங்கீகரிக்கப்பட்டு மீண்டும் பாராளுமன்ற நடவடிக்கைக்காக 26.10.2026 அன்று வரை சபை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டது.



# யாழ்ப்பாணம் – கொழும்பு இடையிலான ரயில் சேவைகள் தொடர்பாக முக்கிய கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான ரயில் சேவைகளை மீள அதிகரித்தல், நேர அட்டவணைகளை மீளமைத்தல் மற்றும் உட்கட்டமைப்புப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான விசேட உயர்மட்டக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 20.06.2026 சனிக்கிழமை காலை நடைபெற்றது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் ரவீந்திர பத்மபிரிய உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

ரயில் சேவைகளின் அதிகரிப்பும் நேர அட்டவணை மாற்றமும்

வடக்கு மாகாணத்துக்கு பெருமளவான சுற்றுலா பயணிகள் வருகை தருவதாலும், பாதுகாப்பான மற்றும் நேரத்தை மீதப்படுத்தும் பயணமாக ரயில் போக்குவரத்து அமைவதாலும், கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலான ரயில் சேவைகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை ஆளுநர் கூட்டத்தில் வலியுறுத்தினார். அத்துடன், பயணிகளின் வசதிக்கேற்ப தற்போதைய நேர அட்டவணைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த ரயில்வே பொது முகாமையாளர், ரயில் இயந்திரங்களுக்கான பற்றாக்குறையே சேவைகளை முழுமையாக மீள ஆரம்பிப்பதில் பிரதான தடையாக உள்ளதெனத் தெரிவித்தார். எனினும், புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், தற்காலிகமாகச் சேவைகளை அதிகரிப்பது மற்றும் பகல் நேர ரயில் சேவைகளை ஒழுங்கமைப்பது தொடர்பில் ஆராய்ந்து துரித நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அத்துடன், "யாழ். ராணி" ரயில் சேவையில் அவசியமான மாற்றங்களை மேற்கொண்டு, அதனை வவுனியா வரை நீடிப்பது குறித்தும் இக்கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

சரக்கு ரயில் சேவை காங்கேசன்துறை வரை நீடிப்பு

தற்போது அநுராதபுரம் வரை மாத்திரமே முன்னெடுக்கப்படும் சரக்கு ரயில் சேவையை, வடக்கு மாகாணத்தின் காங்கேசன்துறை வரை விரிவுபடுத்துமாறு ஆளுநர் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ரயில்வே பொது முகாமையாளர், அதற்கான துரித நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தார்.

போக்குவரத்து அமைச்சர் கௌரவ பிமல் ரத்நாயக்கவின் வழிகாட்டலில், நாடளாவிய ரீதியில் பன்முகப் போக்குவரத்து மையங்களை அமைக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுவதாக இலங்கை அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் இதன்போது தெளிவுபடுத்தினார். பஸ் மற்றும் ரயில் சேவைகளை ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் இவ்வாறான பிரதான நிலையங்களை, வடக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் அமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் மற்றும் காணி விடுவிப்பு

ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் பற்றைக்காடுகளாகக் காணப்படுவதுடன், சில பகுதிகளில் மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. பயன்படுத்தப்படாத அக்காணிகளைத் துப்புரவு செய்து, மக்களுக்கே வழங்கும் சாத்தியக்கூறுகளைப் பரிசீலிக்குமாறு ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணம் நகரிலுள்ள அன்னசத்திர வீதியை ரயில்வே திணைக்களம் மூடியுள்ளமைக்கு மக்கள் மத்தியில் எழுந்துள்ள கடும் அதிருப்தியை ஆளுநரும், அமைச்சர் இ.சந்திரசேகர் அவர்களும் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த ரயில்வே அதிகாரிகள், ரயில்வே பாதைகள் தொடர்பான "மாஸ்டர் பிளான்" அடுத்த ஓராண்டுக்குள் நிறைவடையும் எனவும், அதன் பின்னரே காணிகள் மற்றும் வீதிகள் விடுவிப்புத் தொடர்பில் இறுதி முடிவுகள் எட்டப்படும் எனவும் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண ரயில் பாதைகள் அதிக வேகத்தில் பயணிக்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதால், குறுக்குறுக்கும் வீதிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, பிரதான வீதிகளுடன் இணைக்கும் சமாந்தர வீதிகளை அமைப்பதே விபத்துகளைத் தவிர்க்கும் சிறந்த வழிமுறை என ரயில்வே பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

மாவட்ட ரீதியான முக்கிய கோரிக்கைகள்

"டித்வா" பேரிடரால் சேதமடைந்து இடைநிறுத்தப்பட்டுள்ள ரயில் சேவையை, மடுத் திருவிழாவுக்கு முன்னதாக மீள ஆரம்பிப்பதற்குச் சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனப் பொது முகாமையாளர் உறுதியளித்தார்.

மூடப்பட்ட ரயில் கடவைகளால் மக்கள் பல கிலோமீற்றர்கள் சுற்றிச் செல்லும் நிலை காணப்படுவதால், இது குறித்துக் கள ஆய்வு செய்து சில கடவைகளை விடுவிக்கவும், ஏனையவற்றிற்கு மாற்று வீதிகளை அமைக்கவும் ரயில்வே திணைக்களம் சம்மதம் தெரிவித்துள்ளது.

மாவட்டத்தின் ஒரேயொரு புகையிரத நிலையமான மாங்குளத்தில் அனைத்து ரயில்களும் நிற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுடன், அங்கு பன்முகப் போக்குவரத்து மையமொன்றை அமைப்பதன் ஊடாக தற்போதைய காணி மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

வவுனியா மற்றும் யாழ்ப்பாணம்: பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களால் புனரமைக்கப்பட வேண்டிய வீதிகள் தொடர்பிலும் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த உயர்மட்டக் கலந்துரையாடலில், இலங்கை ரயில்வே திணைக்களப் பணிப்பாளர், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டச் செயலாளர்கள், யாழ்ப்பாணம் உதவி மாவட்டச் செயலாளர், தூய்மை இலங்கைச் செயலணியின் இயக்குநர், வவுனியா மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தொழிற்துறைத் திணைக்களப் பணிப்பாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை உயர் அதிகாரிகள், ஆளுநரின் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.




HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
MULTICULTURAL
CANADA DAY
FREE DOSA FEAST!
FOR CANADIAN SENIORS
HAPPY CANADA DAY
CELEBRATING
CANADA.
TOGETHER.
WEDNESDAY,
JULY 01,
2026
REGISTRATION STARTS
2:00 PM
SERVICE
2:00 PM TO 5:00 PM
VENUE:
WOODSIDE SQUARE MALL
PARKING LOT - IN FRONT OF
SARAVANAA BHAVAN
1571 SANDHURST CIRCLE
SCARBOROUGH
PACKED
DOSA MEALS
FREE
COFFEE & TEA
SPECIAL COMMUNITY PRESENTATION
$500,000
CHEQUE PRESENTATION TO
Scarborough Health Network Foundation
IN SUPPORT OF OUR COMMUNITY, BUILDING A HEALTHIER TOMORROW.
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
DATE 2026
PAY TO THE ORDER OF
Scarborough and Rouge Hospital
Five Hundred Thousand Only
$500,000
Authorized Signature
Proudly supporting our community healthcare
FOR CANADIAN
SENIORS ONLY
PROOF OF CANADIAN
CITIZENSHIP REQUIRED
NO RESERVATIONS
FIRST COME, FIRST SERVED
WHILE QUANTITIES LAST
FOR FURTHER DETAILS CONTACT
info@sugshe.com

ontarioliberal.ca/ssw | @ontarioliberalparty

ஸ்கார்பரோ மக்களே!
உங்கள் மாகாண அரசிடமிருந்து
நீங்கள் இன்னும் அதிகமாகப் பெறுவதற்குத்
தகுதியானவர்கள்.

டக் ஃபோர்டின் 8 ஆண்டு ஆட்சிக்குப் பின்னர்,
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
குடும்பங்கள் அதிகமாகச் செலுத்துகிறார்கள்,
நீண்ட காலம் காத்திருக்கிறார்கள்,
மேலும் எதிர்பார்ப்பதிலும் பார்க்க குறைவாகவே
பெறுகிறார்கள்.

அஹ்சானுல் ஹாஃபிஸ்
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
உங்களுக்கான
வேட்பாளர்

*Authorized by the Scarborough Southwest Riding Association

LIBERAL

AHSANUL
HAFIZ


THE CANDIDATE
FOR YOU IN
SCARBOROUGH
SOUTHWEST



EXPERIENCE
BRAMPTON

Saddle up, Brampton
CANADA DAY
Country Style

Performances by
LEE BRICE
+EMERSON DRIVE





Wednesday,
July 1, 2026
12 – 10 PM
Chinguacousy
Park

Free Concert
Family-Friendly Activities
Inflatable Zone
Food Vendors

Fireworks presented by
Tim Hortons

Lounge sponsored by
Performance Auto Group

Generously sponsored by
Proud sponsor
CIBC

BRAMPTON
brampton.ca/canadaday
Funded by the Government of Canada
Canada

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திடடமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.

அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.



Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca
11/24




MORTGAGE
FINANCIAL SOLUTIONS
COMMERCIAL
RESIDENTIAL
VACANT LAND
INDUSTRIAL
CONSTRUCTION
OUR SERVICE
Purchase
Builder Purchase
MLS Purchase
Private Purchase
Equity line of Credit
Refinance
Renewal
CALL US
NESAN
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332
Scotiabank
FIRST NATIONAL FINANCIAL LP
TD Canada Trust
Manulife
NATIONAL BANK
Desjardins
RFA
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages
55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8





Hari Om

# INVITATION

# SAREGA Music School of Fine Arts

## *****25th Annual Celebrations*****

## அனுமதி இலவசம் | ALL ARE WELCOME !

**Sunday June 28th 2026 3 PM-9 PM**

Michael Power St Joseph School 105 Eringate Drive EtobicokeON M9C 3Z7 (Renforth & Rathburn)

Sponsored by

THE KUDDY FOUNDATION | KG TRUCK GROUP | YAMAHA | Leela Super Market | உதயன்

டொராண்டோ தமிழ் சமூகத்தின் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. முக்கியமாக, கலை, கலாச்சாரம் மற்றும் கலைஞர்கள் மீது அவர்கள் காட்டும் மரியாதை, அன்பு மற்றும் பாசமே இதற்குக் காரணம். என்னிடம் கற்றுக் கொண்ட மற்றும் தொடர்ந்து கற்றுக் கொண்டிருக்கும் பல மாணவர்களில், என் மகள்கள் சாகித்யா மற்றும் காவ்யா டொராண்டோவின் சிறந்த இசைக்கலைஞர்களில் ஒருவராகத் திகழ்கிறார்கள். என்னிடம் கற்றுக் கொள்ளும் உங்கள் பிள்ளைகளால்தான் இது சாத்தியமானது.

இந்த நிகழ்ச்சிக்கான இந்த அழைப்பு, கடந்த 25 ஆண்டுகளில் என்னிடம் கற்றுக் கொண்ட அனைத்து மாணவர்கள் உட்பட அனைவருக்கும் உரியது. அவர்களில் பலர் மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் சிறந்த இசைக்கலைஞர்களாகவும் உள்ளனர். உங்கள் அனைவரையும் நேரில் வந்து நிகழ்ச்சியைக் கண்டு ரசிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். **அன்புடன், நியூயார்க் ராஜா - இசையமைப்பாளர்/ஆசிரியர்**

CONTACT 416 884 7288

***Students of New York-Raja performing with the Celebrity Singer Maharajapuram Ramu (a replica of Sri SPB Sir's Voice) & Popular Singers & Musicians of the GTA respectfully dedicate this show to their Parents***

**Students Orchestra Supported by 'SAHITHYA's BAND**



Maharajapuram Ramu



Prabha | Nandita | Sarika | Saiesan | Ajeesh | Shenaal | Shenaya



NewYork Raja | Sahithya/Keys | Kavya/Bass | Suresh/Drums | Mahthesh/Tabla



Students of Srimathi | Sveta Manorathan | Ughesh Vageeasan | Deborah Swarnakumar | Medha Balathas & Maanvi Balathas

Kalaimathy Vaageeasan, Director of Kalai Natiyalaya Fine Arts

Students of Amirthalaya Academy

cmr | tvi HD | east FM 102.7 | Bucket Biryani

***This Show is to Encourage, Appreciate & Honour the Students on their Accomplishments, and Showcase their talents on the Stage***

**This year we are giving away $5000+ worth Music Instruments & Gift Certificates & Gift Hampers to All the Students & Parents!**

Gold Sponsors/TKF The Kuddy Foundation & KG Truck Group | Hospitality Sponsor/Leela Super Market

Media Sponsors: Uthayan News | Tamil Osai | CMR/TVI | East FM

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "இலங்கையில் புதிதாக 10 இலட்சம் ஏழைகளாம்"!

## பத்தாண்டுகளுக்கு மேலாக ஆட்சி நடத்தி நாட்டை "வங்குரோத்து" நிலைக்குத் தள்ளிய மொ(க்கு)ட்டுக் கட்சி கூக்குரலிடுகின்றது



பத்தாண்டுகளுக்கு மேலாக ஆட்சி நடத்தி நாட்டை "வங்குரோத்து" நிலைக்குத் தள்ளிய மொ(க்கு)ட்டுக் கட்சி நாட்டு மக்களையும் ஏழைகளாக்கியுள்ளது. அத்துடன் மகிந்த ராஜபக்ச குடும்பம் - கோடாபாய குடும்பம் - நாமல் ராஜபக்ச குடும்பம் - பசில் ராஜபக்ச குடும்பம் ஆகியன கோடீஸ்வரக் குடும்பங்களாக ஆகிவிட்ட நிலையில் இவ்வாறான அரசிற்கு எதிரான விமர்சனங்களை இந்த "ஊழல்வாதிகள்" சுமத்துகின்றனர் என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். .இது பற்றி மேலும் தெரியவருவதாவது.

"வளமான நாடு, அழகான வாழ்க்கை" என்ற வாக்குறுதியுடன் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசு, கடந்த ஒன்றரை முதல் இரண்டு ஆண்டு காலப்பகுதிக்குள் நாட்டில் புதிதாக 10 இலட்சம் ஏழை மக்களை உருவாக்கியுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்னும் மொ(க்கு)ட்டுக் கட்சியின் "கோமாளி" சம்பத் அத்துகோரள குற்றம் சாட்டியுள்ளது.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அந்தக் கோமாளி மேற்கண்டவாறு கூறியுள்ளது.

அங்கு "அது" மேலும் தெரிவிக்கையில், "உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் பாடசாலை உபகரணங்களுக்கான வற் வரியை நீக்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசு, தற்போது அதற்கு நேர்மாறாகச் செயற்பட்டு வருகின்றது.

துன்பங்கள் நிறைந்த இறுதிப் பௌர்ணமி தினம் என்று கூறி ஆட்சிக்கு வந்த இவர்களின் கீழ் 18 பௌர்ணமி தினங்கள் கடந்துவிட்ட போதிலும், நாட்டு மக்களுக்கு எவ்வித நன்மைகளும் கிடைக்கவில்லை.

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல், மாதமொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாக வியாபாரம் செய்யும் அனைத்து வர்த்தகர்களையும் வற் வரியில் பதிவு செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள சிறிய கடைகளுக்கும் இந்த வற் வரி விதிக்கப்படும் போது, அந்த வரியை வர்த்தகர்கள் கிராமத்து ஏழை மக்களிடமிருந்தே அறவிடுவார்கள். இது அரசின் அனுசரணையுடன் மக்களின் பைக்கற்றுக்களைப் பறிக்கும் ஒரு பகற்கொள்ளையாகும். மகா திறைசேரியில் ட்ரில்லியன் கணக்கில் பணம் இருப்பதாகக் கூறினாலும் ஏழைகளின் இறுதிச் சதமும் சுரண்டப்படுகின்றதே தவிர நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

நாட்டின் சுகாதாரத் துறை தற்போது முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளது. பல முக்கிய புற்றுநோய் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதுடன், மருத்துவமனைகளில் நூற்றுக்கணக்கான மருந்து வகைகள் இல்லை. தினசரி ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகி வரும் சூழலில், அவர்களுக்கு மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் கூட இல்லை. ஜனாதிபதியால் அதிக நிதி ஒதுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டம் முற்றிலும் தோல்வியடைந்துள்ளது.

தகுதியற்றவர்களை உள்ளூராட்சி அமைப்புகளுக்கு நியமித்ததால் கழிவு மேலாண்மை சீர்குலைந்து, டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் அரசு திணறி வருகின்றது.

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை பெருமளவு குறைந்துள்ள போதிலும் அரசு அதன் பலனை மக்களுக்கு வழங்காமல் ஏமாற்றி வருகின்றது. தற்போதைய நிலவரப்படி பெற்றோல் லீற்றர் ஒன்றிலிருந்து 125 ரூபாவையும், டீசல் லீற்றர் ஒன்றிலிருந்து 110 ரூபாவையும் குறைக்க முடியும். துறைமுகத்துக்குக் கொண்டு வரப்படும் விலைக்கே எரிபொருள் தருவோம் என்று தேர்தல் காலத்தில் கூறியவர்கள், இன்று மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கின்றார்கள். எதிர்வரும் மாத இறுதிக்குள் இந்த விலைக்குறைப்பு கட்டாயம் செய்யப்பட வேண்டும்.

அரசின் தோல்விகளையும் ஊழல்களையும் மூடிமறைப்பதற்காக அமைச்சர்கள் ஊடகவியலாளர்களையும் பொதுமக்களையும் அச்சுறுத்தி வருகின்றார்கள். எரிபொருள் விலையைக் குறைக்குமாறு கேட்டபோது பிரதமர் அது "எண்ணெய் கடை அல்ல" எனக் பொறுப்பற்ற விதமாகப் பதிலளித்துள்ளார். தொழிற்சங்கத் தலைவர் ரஞ்சன் ஜயலால் தாக்கத் தயாராக இருப்பதாகக் கூறுகின்றார். பொறுப்பான அமைச்சர் ஒருவர் நாட்டின் விவசாயிகளைக் கசிப்பு வியாபாரிகள் என அவமதித்துள்ளார்.

அரசு முற்றாகத் தோல்வியடைந்துள்ள நிலையில், 1988, 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியைப் போல் மக்களை ஒடுக்கவும், பயமுறுத்தவும் முயற்சிக்கின்றது." - என்றும் அது தெரிவித்துள்ளது. அதேவேளை அங்கு சமூகமளித்திருந்த ஒரே ஒரு சிங்கட மொழி ஊடகவியலாளர்கள் மேற்கண்ட கேள்வியை கேட்ட போது "நாங்கள் பின்னர் பேசுவோம்" என்றுஅவரை எச்சரிக்கும் வகையில் கூறியதாக அறியப்படுகின்றது.

# தனது சகோதரன் மகிந்தாவைப் போன்றே சிறைக்குள் அடைபட்டுக்கிடக்கவுள்ளதை எண்ணி அச்சமுறும் கோட்டாபாய என்னும் மற்றொரு ஊழல் ஜனாதிபதி

## தான் கைதைத் தடுக்கக் கோரும் கோட்டாபயவின் ரிட் மனு ஜூலை ஒத்திவைக்கப்பட்டது!

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான தற்போதைய விசாரணைகளின் பின்னணியில், தம்மைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் ஊழல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனு மீதான மேலதிக சமர்ப்பணங்களை, மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று ஆராய்ந்து, எதிர்வரும் ஜூலை மாதம் 06 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

முன்னாள் "ஊழல்" ஜனாதிபதியின் இந்த விசேட மனுவானது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் ரோஹந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் சரத் திஸாநாயக்க ஆகியோர் அடங்கிய இருவர் கொண்ட நீதியரசர்கள் ஆயத்தின் முன்னிலையில் 24ம் திகதி அன்று இரண்டாவது நாளாகவும் தொடர்ச்சியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, மனுதாரரான முன்னாள் ஊழல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, இன்றைய மனு பரிசீலனையின் போது பல புதிய மற்றும் மேலதிக சட்டச் சமர்ப்பணங்களை நீதியரசர்கள் ஆயத்தின் முன்னிலையில் முன்வைத்தார்.



இதனைத் தொடர்ந்து இருதரப்பு வாதப்பிரதிவாதங்களை ஆராய்ந்த நீதியரசர்கள் ஆயம், இந்த மனு தொடர்பான மேலதிக சட்ட விவாதங்களை எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக உத்தரவிட்டுள்ளது.

# ஸ்டீல்ஸ் அவென்யூ வீதி விரிவாக்கத்திற்கு எமது ஒன்ராறியோ அரசு நிதியுதவி வழங்கியுள்ளது

## – இணையமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவிப்பு




ஒன்ராறியோ அரசு, மத்திய அரசாங்கத்துடன் இணைந்து, ரொறன்ரோ நகரில் மிகவும் முக்கியமான உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கு ஆதரவு அளித்து வருகிறது. இதன் மூலம் மேலும் இணைக்கப்பட்ட மற்றும் வளர்ந்து வரும் சமூகங்களை உருவாக்க முடியும். இந்த முதலீட்டின் ஒரு பகுதியாக, ஸ்கார்பரோ "ரூஜ் பார்க் பகுதி குடியிருப்பாளர்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பான, டாப்ஸ்காட் வீதி **(Tapscott Road)** முதல் நைன்த் லைன் **(Ninth Line)** வரையிலான ஸ்டீல்ஸ் அவென்யூ ஈஸ்ட் **(Steeles Ave E)** வீதியை விரிவுபடுத்துவதற்கான செலவில் 90 சதவீதத்தை ஒன்ராறியோ மற்றும் மத்திய அரசாங்கங்கள் ஏற்கும்.- இவ்வாறு ஒன்றாரியோ மாகாண இணை அமைச்சரும் ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் அறிவித்துள்ளார்

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில் "ஸ்கார்பரோ குடியிருப்பாளர்களுக்கு இது குறுகிய பயண நேரம், குறைந்த போக்குவரத்து நெரிசல், பாதுகாப்பான மற்றும் சீரான வீதிகள் ஆகியவற்றைக் குறிப்பதோடு, குடும்பங்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், முதியவர்கள் மற்றும் உள்ளூர் வணிகர்களுக்கு சிறந்த போக்குவரத்து இணைப்புகளை வழங்கும். இந்த ஸ்டீல்ஸ் அவென்யூ ஈஸ்ட் வீதி விரிவாக்கமானது, ஸ்கார்பரோவை அதன் அண்டை சமூகங்களுடன் இணைக்கும் ஒரு பரபரப்பான வழித்தடத்தில் போக்குவரத்து ஓட்டத்தை மேம்படுத்த உதவப்போகிறது. இதன் மூலம் அன்றாடப் பயணம் மிகவும் வசதியானதாக மாறும்.

இது தொடர்பாக இணைஅமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் கூறுகையில், "டாப்ஸ்காட் வீதி மற்றும் நைன்த் லைன் இடையேயான ஸ்டீல்ஸ் அவென்யூ ஈஸ்ட் வீதியை விரிவுபடுத்துவதற்கான செலவில் 90 சதவீதத்தை மத்திய அரசாங்கத்துடன் இணைந்து எங்கள் அரசு ஏற்பதில் நான் பெருமையடைகிறேன்," என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், "ஸ்கார்பரோ பகுதி மக்கள் பல ஆண்டுகளாக இதைக் கேட்டு வருகின்றனர், இப்போது நாங்கள் அதைச் செய்து முடிக்கிறோம். இதன் மூலம் பயண நேரம் குறையும், போக்குவரத்து நெரிசல் நீங்கும் மற்றும் நமது சமூகத்தின் வாழ்க்கை முறை மேலும் வசதியாகும்" என்றார்.

ரொறன்ரோ முழுவதும் உள்ள குடும்பங்கள், வணிகங்கள் மற்றும் எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான வீதிகள், போக்குவரத்து இணைப்புகள் மற்றும் உள்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு அனைத்து நிலை அரசாங்கங்களுடனும் இணைந்து செயல்படுவதில் ஒன்ராறியோ அரசு கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இந்த முதலீடு பிரதிபலிக்கிறது.

கனடிய செய்திகள் Canadian News

# கனடா – BEHIND ME INTERNATIONAL MEDIA ஊடகம் நடத்திய LEGENDS & ICONS AWARDS – 2026 என்னும் சாதனை விருதுகள் வழங்கும் விழா

கனடாவைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் BEHIND ME INTERNATIONAL MEDIA ஊடக நிறுவனம் முதலாவது முறையாக நடத்திய EGENDS & ICONS AWARDS - 2026 என்னும் சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கும் பிரமாண்டமான விழா கடந்த 20-06-2026 அன்று ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள Brighton Banquet & Convention Centre மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

BEHIND ME INTERNATIONAL MEDIA நிறுவனத்தின் தலைவரும் இந்த LEGENDS & ICONS AWARDS விருதுகள் வழங்கும் விழாவை தொடர்ச்சியாக ஆண்டு தோறும் நடத்த வேண்டும் என்ற திடசங்கற்ப்பத்தோடு செயற்படுபவருமான கனேந்திரன் செல்வராஜா அவர்கள் தனது குழுவினர் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் உதவியோடு விழாவை ஏற்பாடு செய்திருந்தார்.























அத்துடன் விழாவின் தொடக்கத்தில் அவரது நிறுவனர் உரை நடைபெற்றது. அதில் தனது வர்த்தக மற்றும் ஊடகப் பயணம் - தமிழ்த் தேசியத்தின் மீது தான் கொண்டுள்ள ஆர்வம் மற்றும் பற்று இவை பற்றியெல்லாம் எடுத்துரைத்தார்.

அன்றைய விருது விழாவில் சிறப்பு விருந்தினராக ஒன்ராரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். அத்துடன் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் மற்றும் "உதயன்" பிரதம ஆசிரியரும் பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உப-தலைவருமான லோகன் லோகேந்திரலிங்கம் ஆகியோர் உட்பட மதகுருமார்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மேற்படி விருதுகள் வழங்கும் விழாவில் எல்லாமாக 20 சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பெற்ன என்பதும் அத்துடன் இலங்கையிலிருந்து மூன்று பெண் சாதனையாளர்களும் இரண்டு ஆண் சாதனையாளர்களும் அழைக்கப்பெற்றிருந்தனர். இவர்களில் மூவர் புற்று நோய் வைத்திய நிபுணர்கள் என்பதும் வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் சேவை நோக்குடன் பணியாற்றுபவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் அவுஸ்த்திரேலியாவிலிருந்தும் ஒரு தொழிலதிபரும் கல்வியாளருமான சாதனையாளரும் அன்றைய தினம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்.

விருதுகள் வழங்கும் நிகழ்வுகளுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. விருது பெற்ற 20 வெற்றியாளர்களில் குழு அல்லது அமைப்பு என்ற வகையில் கனடாவின் பிறிமா நடனப் பாடசாலை மற்றும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் ஆகியவை தெரிவு செய்யப்பெற்று விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

இந்த விருதுகள் வழங்கும் விழாவில் உலகெங்குமிருந்து தெரிவுசெய்யப்பட்ட தனிப்பட்ட சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். குறிப்பாக புற்றுநோய் தடுப்பு சிறப்பு வைத்தியர்கள், இசைக்கலைஞர்கள், நடனக்கலைஞர்கள், திரைப்படக் கலைஞர்கள், தன்னார்வத் தொண்டர்கள் போன்றவர்களுக்கு மதிப்பளிக்கப்பட்டது.

BEHIND ME INTERNATION FOUNDATION விருது விழாவில் விருதுகளைப் பெறவும் பயனுள்ள மருத்துவக் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் வருகை தந்திருந்த இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் பணியாற்றும் மருத்துவப் பெருந்தகைகள் டாக்டர் ஸ்ரீதரன் கணேசமூர்த்தி. டாக்டர் அஹமட் இக்பால் மற்றும் டாக்டர் கவிதா இந்திரநாத் ஆகியு 3 வைத்திய கலாநிதிகள் மற்றும் BIG BOSS மற்றும் "லியோ" திரைப்படப் புகழ் ஜனனி அவரோடு இலங்கையில் சமூக ஊடகத் தளத்தில் புகழ்பெற்ற பேர்லிஜா ஆகிய ஐவரும் தாயகத்திலிருந்து அழைக்கப் பெற்றவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

*- UTHAYAN LJI Journalist Ganesh -*

# பகிரப்பட்ட மாகாண – உள்ளூராட்சி அதிகாரத்தினை சுற்றாடல் சட்டம் வாயிலாக அரசாங்கம் பறிக்கின்றது என்கிறார் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர்!

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் ஒவ்வொன்றாக மத்திய அரசாங்கத்தின் அதிகார சபைகள் ஊடாக பறிக்கப்படுகின்றன. மத்திய அதிகார சபைகளுக்கு அதிக சட்ட அதிகாரங்களைக் கையளிப்பதன் வாயிலாக மாகாண நிரலுக்கள் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் பறிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய சுற்றுச் சூழல் சட்ட மூலம் தொடர்பில் மத்திய அதிகார சபையினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் நல்லூர் பிரதேச சபையில் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் உள்ளூராட்சி மன்றங்கள் சார்பாக தமது அபிப்பிராயத்தினை வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் முன்வைத்தார்.

அவர் மேலும், தற்போது அரசாங்கத்தினால் சுற்றுச் சூழல் சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இச் சட்ட மூலத்தின் வாயிலாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச அதிகாரங்களும் மீள மத்திக்கு எடுக்கப்படுகின்றது. அரசியலமைப்புச் சட்டத்தின் 9 ஆவது அட்டவனையில் நிரலில் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி விடயங்கள் ஜனநாயகத்திற்கும் சட்டத்திற்கும் புறம்பாக பறிக்கப்படுகின்றன.

கொண்டு வரப்படும் சட்டத்தின் பிரகாரம், சுற்றாடல் விடயத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களில் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான அளணியை நிரப்புவதற்கு அரசாங்கம் அனுமதிக்கவில்லை. கழிவகற்றும் வாகனங்களுக்கான அனுமதிகள் கிடப்பில் உள்ளன.

சில நியமத்துணைவிதிகளை நாம் உருவாக்கவதற்கு மாகாண சபையின்றி தடைகள் உள்ளன. இவ்வாறான நிலையில் முந்திக்கொண்டு அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை பறிப்பது மட்டுமல்ல உள்ளூராட்சி மன்றங்களை செயலிழக்கச் செய்யம் வகையில் நீதிமன்றங்களில் நிறுத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றது. கண்டிக்கத்தக்கது.

இவ்வாறாகவே எமது அதிகாரங்கள் ராஜபக்சாக்களின் காலப்பகுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபை, கடலோரபாதுகாப்பு அதிகார சபைகள் ஊடாக பறிக்கப்பட்டது. தற்போது சுற்றாடல் அதிகார சபை ஊடாகப் பறிக்கப்படுகின்றது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.



# மன்னாரில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய வடை தயாரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளது

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

## சுகாதாரத்துறை அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை

(23-06-2026)

மன்னார், பள்ளிமுனை பிரதான வீதியில் இயங்கி வந்த வடை தயாரிப்பு நிலையம் ஒன்று, சுகாதார அதிகாரிகளால் யூன் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று மேற்கொள்ளப்பட்ட திடீர் ஆய்வின்போது சுகாதார சீர்கேடுகளுடன் இயக்கியமை கண்டறியப்பட்டு, உடனடியாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபை பொது சுகாதார பரிசோதகர் மற்றும் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி (MOH) பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர், குறித்த வடை தயாரிப்பு நிலையத்தில் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, குறித்த நிலையத்தில் உணவுப் பொருட்கள் மனித பயன்பாட்டிற்கு ஒவ்வாத வகையிலும், மிகவும் சுகாதாரமற்ற முறையிலும் தயாரிக்கப்படுவது அதிகாரிகளால் உறுதி செய்யப்பட்டது.

குறிப்பாக உணவு தயாரிக்கும் இடத்தில் ஈக்கள் அதிக அளவில் காணப்பட்டது, கழிவுநீர் முறையாக வெளியேற்றப்படாமல் சுகாதார பாதுகாப்பின்றி தேங்கியிருந்தது, கோழிகள், புறாக்கள் மற்றும் ஏனைய செல்லப்பிராணிகள் கழிவுகள் காணப்பட்ட அசுத்தமான சூழலில் உணவு தயாரித்தமை, உணவு தயாரிக்கும் இடத்தின் ஒட்டுமொத்த சுகாதாரம் மிகவும் மோசமாக இருந்தது. போன்ற குறைபாடுகள் அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறித்த நிலையத்தில் உணவு தயாரிப்பு நடவடிக்கைகள் நிறுத்துமாறு உரிமையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

சுகாதாரத்துறையினரால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை முழுமையாக நிவர்த்தி செய்து, இடத்தை சுத்தப்படுத்தி, சுகாதாரமான முறையில் மீள் அனுமதி பெறும் வரை நிலையத்தை இயங்க வேண்டாம் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்த திடீர் ஆய்வு நடவடிக்கைக்கு மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரியின் பூரண ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "ராஜபக்சவின் முழுக்குடும்ப உறுப்பினர்களும் சிறைக் "கூண்டுக்குள்" வாழ வேண்டிவரும் என்பதே மகிந்த ராஜபக்சவின் அச்சம்"



## முன்னாள் "ஊழல் ஜனாதிபதி" மஹிந்தவின் கருத்துக்கு பொது அமைப்புக்கள் கண்டனம்

- ந.லோகதயாளன்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசால், ராஜபக்ஷ குடும்பத்தினர் அனைவரும் திட்டமிட்ட முறையில் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளதை பொது அமைப்புக்கள் சில கண்டித்துள்ளன.

இது குறித்து ஊடகங்களிடம் அமைப்பின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில், "தற்போதைய திசைகாட்டி அரசானது ராஜபக்ஷ குடும்பத்தினரைப் பழிவாங்கும் ஒற்றை நோக்கத்துடன்தான் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருகின்றது என்று அந்த குடும்பமுமே அச்சமடைவதற்கு காரணம் மகிந்தா தொடக்கம் அவரது புதல்வர்கள் மற்றும் சகோதரர்கள் மக்கள் மருமக்கள் என அனைவரும் ஒன்றாக தேசத்தின் சொத்துக்களை கொள்ளஅடித்தவர்கள். கோடிக்கணக்கான ரூபாய் வெளிநாட்டு உதவி நிதியையும் தமது சொந்தத் தேவைக்காக சுரண்டியவர்கள். ஆட்சியில் இருந்த. ஒவ்வொரு நாளும் குறியாகக் கொண்டு மக்கள் பணி செய்வதாக மக்களை ஏமாற்றியவர்கள். எனவே இந்த ஊழல்வா திகளுக்கு ஏதாவதொரு வகையில் தண்டனை நடவடிக்கைகளை அரசு மிகத் தீவிரமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

தற்போதைய கடுமையான பொருளாதாரச் சூழலில் சிக்கியுள்ள நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கோ அல்லது அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய நிவாரணங்களை வழங்குவதற்கோ மகிந்தா குடும்பம் மற்றும் அவரது சகாக்கள் என அனைவரும் கொள்ளை அடித்த நிதி மீண்டும் திறைசேரிக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட வேண்டும் இதற்கான முறையான நடவடிக்கைகளையும் உடனடியாக திசைகாட்டி அரசாங்கம் எடுக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இந்த நாட்டை கொள்ளை அடித்து வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்தவர்கள் இனிமேலும் அரசியலுக்கு வர மக்கள் அனுமதிக்கக்கூடாது என்றும் அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

# தனது 19 ஆவது மாணவியின் பரத நாட்டிய அரங்கேற்றத்தை கனடாவில் மேடையேற்ற இங்கு வந்துள்ள "பரத, மிருதங்க கலா வித்தகர்" திவ்யா சுஜேன்!

கனடிய செய்திகள் Canadian News



19 ஆவது பரத நாட்டிய அரங்கேற்றம் காணும் கனடா வாழ் அரங்கேற்றச் செல்வி நிஷ்கிதா கோகுல்ராஜ் அவர்களின் ஆற்றலை கனடாவில் மேடையேற்ற இங்கு வந்துள்ள "பரத, மிருதங்க கலா வித்தகர்" திவ்யா சுஜேன் அவர்கள் இங்கும் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வருகின்றார். அண்மையில் கனடா வாழ் குரும்பசிட்டி மக்கள் அமைப்பினால் கௌரவிக்கப்பெற்றார்.

"அன்பின் வழியது உயிர்நிலை" பரத நாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் வெள்ளியன்று 26.06.2026 மாலை 5 மணியளவில் Richmond Hill, Performing Arts Centre (10268 Yonge St) மண்டபத்தில் ஆடல் மடந்தை நிஷ்கிதா கோகுல்ராஜ் அவர்களால் நிகழ்த்தப்பெறுகிறது. இலங்கை அபிநயஷேத்ரா நடனப் பள்ளி இயக்குனர் "கலாசூரி" திவ்யா சுஜேன் அவர்களின் மாணவியான நிஷ்கிதாவின் அரங்கேற்ற நிகழ்விற்கென கனடா வந்துள்ள பரத, மிருதங்க கலா வித்தகர் திவ்யா சுஜேனையும், இந்நிகழ்வை மேலும் சிறப்பிக்க முதன்மை விருந்தினராகப் பங்கேற்பவருமான "ஞானபாநு" ராஜ்குமார் பாரதி (மகாகவி சுப்ரமணிய பாரதியாரது கொள்ளுப்பெயரன்) அவர்களையும் அண்மையில் அவர்களது இல்லத்தில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றது.

உலகின் பல்வேறு நாடுகளின் 500க்கு மேற்பட்ட நடனக் கலைஞர்களோடு இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்பவராக இணைந்து கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், டென்மார்க், சுவிற்சர்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, இந்தியா போன்ற நாடுகளுக்கான கலைச் சுற்றுலாவை வெற்றிகரமாக நிறைவு செய்தவர். நோர்வேயில் நடந்தேறிய திவ்யாவின் Oslo Melaa நிகழ்வில் 80,000 பார்வையாளர்கள் கலந்து கொண்டமையையும் விசேடமாகக் குறிப்பிடவேண்டியதொன்று. ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், தனித்துவமான பயிற்சி நுணுக்கங்களையும் கொண்ட இவரின் 19 ஆவது பரத நாட்டிய அரங்கேற்றம் இதுவாகும்.




கலைத்துறையில் ஐம்பது ஆண்டுகளாகப் பயணிக்கும் ஞானபாநு ராஜ்குமார் அவர்களைத் தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தமை பாக்கியமே. எத்துணை ஆழமான புலமை இருந்தபோதிலும், மிகத் திறந்த மனதோடு தமது பிள்ளைப்பருவம், அன்னை லலிதா பாரதி அவர்களது வழிநடத்தல், மகாகவி பாரதியார் அவர்களின் கொள்ளுப்பெயரன் எனும் தமது பொறுப்பின் கனதி, தமது கடமைகள் எனப்பல்வேறு கோணங்களில் அளவாக, ஆழமாக உரையாடியது மட்டுமின்றி மிக எளிமையாக தனியே எங்களுக்காகவே பாடல்களைப் பாடியதும் எங்கள் உள்ளங்களை நிறைத்திருந்தது.

"ஏழாவது மனிதன்" திரைப்பட "நெஞ்சில் உரமுமின்றி" பாடல், "பாரதியார்" திரைப்பட "கேளடா மானிடவா" பாடல் உட்பட 6 மொழிகளில் திரைப்பட பாடல்கள் பாடியுள்ள இம்மகத்தான மனிதரை, உலகப்புகழ் பெற்ற கறுப்பினப் பாடகர் Sharon Rose உடன் பணியாற்றிய இப்புலமையாளரை மனதுள் வியந்தபடி விடைபெற்றோம். இத்தகைமையாளர்களை வெள்ளியன்று Richmond Hill, Performing Arts Centre மண்டபத்தில் சந்திப்போமே!

*குரும்பசிட்டி ஜெகதீசன் - (எழுத்தாளர்) - கனடா*


## அமெரிக்காவில் உணவகம் ஒன்றில் வேலை வாய்ப்பு



Chef-Cook (சமையல் வல்லுனர் மற்றும் உதவியாளர்கள்)

அமெரிக்காவில் உள்ள உயர்தர உணவகம் ஒன்றிக்கும் அனுபவமுள்ள Chef-Cook (சமையல் வல்லுனர் மற்றும் உதவியாளர்கள்) ஆகியோர் தேவை.

விண்ணப்பதாரர்கள் கனடிய குடியுரிமை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

அத்துடன் தமிழ்-மலையாளம் - ஹிந்தி - தெலுங்கு - ஆங்கிலம் பேசத்தெரிந்தவர்களாக இருந்தால் முன்னுரிமை அளிக்கப்படும். தென்னிந்திய மற்றும் மேற்கிந்திய உணவுகள் தயாரிப்பதில் அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.

WhatsApp Text Messages மூலம் தயவு செய்து விண்ணப்பங்களை அனுப்பவும். அதில் கீழ்க் கண்ட விபரங்களையும் இணைக்கவும்: விண்ணப்பதாரியின் வயது, திருமண நிலை, மற்றும் தொலைபேசி எண்.

**விண்ண்ப்பம் அனுப்பவேண்டிய எண்: (937) 475-5992**

Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

KANAGAAMBIKAI

Pawn Brokers




கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1202



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கண்ணகி அம்மன் ஆலயம் வற்றாப்பளை

வைகாசி மாதத்தின் மூன்றாவது திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயப் பொங்கலாகும். இத் திங்கள் இரவு வளந்து நேருதல் என்னும் நிகழ்வு நடைபெறும். பூசாரியார் வளந்து (பானை) ஏந்தி ஆடுவார். ஆட்டத்தின் உச்சக்கட்டத்தில் வளந்தினை எறிந்து ஏந்துவார். இறுதியில் நிலத்தில் பள்ளமாக வெட்டி அமைக்கப்பட்ட அடுப்பில் வளந்தினை வைப்பர். பின் பொங்கலிடும் அரிசியை ஏந்தி ஆடுவார். ஏந்தியாடும் அரிசியையும் அள்ளி மேலே எறிவார். இவ்வரிசிகள் நிலத்தில் விழுவதில்லை. அத்தோடு வளந்துப்பானையில் சூத்திரதாரணம் செய்யப்பட்டு, பானையின் கழுத்தில் வெற்றிலை கட்டப்பட்டிருக்கும். இவைகள் பெருநெருப்பிலும் எரிந்து சாம்பராகாது, கட்டியபடியே காணப்படுவது மிக அதிசயமானது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் காலத்திலே, பூசாரியாருக்கு உதவிசெய்வோரை, நோற்புக்காரர்கள் என அழைப்பர். இவர்களைக் கோவிற்பிள்ளைகள் எனவும் அழைப்பர். இவர்கள் கோவிலோடு நெருங்கிய தொடர்புடையவர்களாகவும், கண்ணகி அம்மன் பக்தர்களாகவும் காணப்படுவர். இவர்கள் கோவில் மூலத்தானத்திற்குள் செல்லாது மண்டபத்தில் இருந்து சகல உதவிகளையும் செய்வர். சிலாவத்தைக் கடற்கரையிலிருந்து தீர்த்தம் கொண்டுவரப்பட்டு, காட்டாவிநாயகர் ஆலயத்தில் தீபம் ஏற்றப்பட்டதும், கண்ணகியின் சிலம்புகூறல் ஏட்டினை, இங்கேயே வாசிக்க ஆரம்பிப்பர். இக் கோவிலில் பொங்கல் நடைபெறுங்காலத்தில், சிலம்பு கூறல் படலம், ஏட்டிலிருந்து வாசிக்கப்படும். இக்காவியத்திலே கண்ணகி கோவலன் கதை, பாண்டிய மன்னன் சபையில் வழக்குரைத்தல், கண்ணகி மதுரையை எரித்தல், மதுரையை விட்டு வெளியேறி இலங்கைக்கு வருதல், இலங்கையின் பல இடங்களிலும் தங்கியிருந்து பின் பத்தாம்பளையை அடைதல், பத்தாம்பளையில் சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெறும். இங்கு திங்கட்கிழமை அதிகாலைவரை வாசிக்கப்பட்டு, மீதியை வற்றாப்பளைப் பொங்கல் தினத்தன்று, வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவிலிலேயே வாசித்து முடிப்பர். சிலம்பு கூறல் ஏடு வாசிப்பதைக் கேட்கச் சுற்றுப்புறக் கிராமங்களில் இருந்தும், பெருந்திரளான மக்கள் கூடுவர். வைகாசிப் பொங்கலோடு, பங்குனியிலே வருகின்ற திங்கட்கிழமைகள் யாவும், கண்ணகை அம்மனுக்குரிய சிறப்பு நாட்களாகும். எனினும் இவற்றுள் பங்குனிக் கடைசித்திங்கள் மிக விமரிசையாகக் கொண்டாடப்படும். பொங்கல் காலத்திலே பக்தர்களை நோய், பிணி அணுகாமல் இருக்க, பரிலயம் கட்டுதல் என்னும் நிகழ்வு நடைபெறும். பரிலயம் என்பது பரிவாரப்பேய் அல்லது பேய்பிசாசைக் குறிக்கும் சொல். இன்றும் கிராமப்பகுதிகளில் ஒருவருடைய பிடிக்காத செயலைக் குறிக்க "பரிகலப்பேய் மாதிரி", என்ற சொற்பதம் பயன்படுத்தப்படுகின்றது. இச்சொல்லே நாளடைவில் பரிலயம் என மருவியிருக்க வேண்டும். திருவிழாக்காலங்களில் பக்தர்களுக்குத் தீயவற்றால் துன்பம் நேராதிருக்க, கொடியேற்றத்திற்கு முன் இவற்றைக் கட்டிப்போடுவதான சம்பிரதாயம் நிகழ்வதுண்டு. அவ்வாறே திருவிழா நடைபெற்ற பின்னர் இவற்றிற்குரிய காப்பை நீக்கிவிடுவர். இவ்வாறான ஒரு சம்பிரதாயமே, பரிலயம் என வற்றாப்பளைக் கண்ணகிகோவிலிலும் நடைபெறுகின்றது.

பரிலயம் கட்டப்பட்ட காலப் பகுதியில், கோவிலைச் சுற்றியுள்ள கிராமங்களில், உரல் நிறுத்தி நெல் குற்றமாட்டார்கள். மரணச் சடங்குகள் நிகழ்ந்தால், பறைமேளம் அடிப்பதில்லை. களியாட்ட நிழ்ச்சிகளையும் நடத்த மாட்டார்கள். சூடுமிதித்தல் போன்றவையும் நடைபெறுவதில்லை. இவ்வாறான பாரம்பரியங்களை மிக அவதானத்துடன் கடைப்பிடிப்பது வற்றாப்பளையைச் சூழவுள்ள கிராமங்களில் காணப்படுகின்றது. வற்றாப்பளை கண்ணகையின் பொங்கல், திங்கள் இரவு முடிவடைந்த பின்னர், மறுநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலையில், பரிலயம் வழிவிடுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறும். பூசாரியார் வேப்பங் குழையால், தீர்த்தத்தினை எடுத்து எல்லா இடங்களிலும் தெளிப்பார். பின் மீதித் தீர்த்தத்தினையும், வேப்பங் குழையையும் நந்திக்கடலில் சேர்த்து விடுவார். இந்நிகழ்ச்சியின்போது குளிர்த்திப் பாடல்கள் பாடப்படும். பரிலயம் வழிவிடுதல் நிறைவேறியபின் கிராமங்களில், ஐதீகமாக நிறுத்தி வைத்த வேலைகள் யாவும் நடைபெறும். அத்தோடு கால்நடையாகக் கதிர்காமம் செல்வதற்காகத் தங்கியிருக்கும் அடியார்கள், தமது பயணத்தினையும் மேற்கொள்ளுவார்கள். இவற்றோடு தொடர்புடைய பொங்கல் ஒன்று நாவற்காட்டு வைரவர் கோவிலில் நடைபெறும். இதனை எட்டாஞ்சடங்கு என்றும் கூறுவர். இச்சடங்கு பரிலயம் வழிவிடுதல் நடைபெற்ற பின் வரும் திங்களன்று இடம்பெறும். இப்பொங்கல் பரியலங்கட்கு உணவளிப்பதற்காகப் பொங்கப்படுவதாகக் கூறுவர். பொங்கல் பொங்கிப்படைத்த பின்னர், கொள்ளி எறும்புகள் எனப்படும் ஒருவகை எறும்புகள் மொய்த்து அப்பொங்கலை உண்ணும். இவற்றைப் பரியலங்கள் எனக் கருதுவர்.

இலங்கையின் பலவிடங்களிலே கண்ணகை அம்மன் வழிபாடு காணப்படுகின்றது. கண்ணகி அம்மனைச் சிங்கள மக்கள் பத்தினித் தெய்யோ என்று அழைப்பதோடு, ஆடிமாத பூரணையில், கண்ணகை அம்மனுக்கு விழாவெடுப்பர். சில கண்ணகை அம்மன் கோவில்களில், கண்ணகி அம்மன் விழாக்காலத்தினைக் கண்ணகி அம்மன் சடங்கு எனக் கொண்டாடும் வழக்கமும் காணப்படுகின்றது. இச்சடங்கு மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நாட்கள்வரை நடைபெறும். இக்காலங்களில் கண்ணகி வழக்குரை பாடப்பட்டு இறுதி நாளில் குளுத்திக்கதைப்பாடல் பாடப்படும். வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவிலை அண்டிய கிராமப்பகுதிகளில், கண்ணகி அம்மனின் அருட்செயல்களைக் கருவாகக் கொண்டு, வடமோடிப்பாங்கிலான கோவலன் கூத்து ஆடப்படுகின்றது. வற்றாப்பளைக் கண்ணகி பொங்கலுக்கான தீர்த்தம் எடுப்பதற்கு முன், கோவிலுக்கு அண்மையிலுள்ள கிராமங்களில், கோவலன் கூத்து மேடையேற்றப்படும். வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு போன்ற கிராமங்களைச்சேர்ந்த அண்ணாவிமார், கூத்தினைப் பழக்கி, இரவிரவாக மேடை யேற்றுவார்கள். வற்றாப்பளைக் கண்ணகியம்மனின் பெருமைகளைக் கூறுவனவாக வசந்தன் பாடல், மழைக்காவியம், அம்மானை ஆகியன காணப்படுகின்றன. பொதுவாகக் கண்ணகியின் வரலாற்றினைச் சிலப்பதிகாரம், கண்ணகி வழக்குரை, உடுக்குச்சிந்து, வசந்தன் கவிகள், கண்ணகி குளுத்திப்பாடல், கண்ணகிஅம்மன் காவியம், கண்ணகி அம்மன் அகவல் ஆகியவற்றின் மூலம் அறியலாம். தற்காலத்தில் பல மாற்றங்கள் காணப்பட்டாலும் மரபுவழியான செயற்பாடுகள் இன்றும் தொடர்கின்றன.

வளரும்..

# அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் நடைபெற்ற ஸ்ரீமதி விக்னேஸ்வரி ஜெயகாந்தி அவர்களின் மாணவி செல்வி அக்ஷரா ஹரிகரனின் பரதநாட்டிய அரங்கேற்றம்!







அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் கடந்த 20-06-2026 அன்று சனிக்கிழமை நடைபெற்ற "நாட்டிய விஷாரத்" ஸ்ரீமதி விக்னேஸ்வரி ஜெயகாந்தி அவர்களின் மாணவி செல்வி அக்ஷரா ஹரிகரன் அவர்களது பரதநாட்டிய அரங்கேற்றம் இசையும் கலையும் பரதமும் கலந்த ஒரு தெய்வீக மேடை நிகழ்வாக நடைபெற்றது குறித்து அரங்கேற்றத்தில் கலந்து சிறப்பித்தவர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளார்கள்.

நீண்ட காலமாக அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் "ருக்மினி நர்த்தனாலயம்" என்னும் பரத நடனப் பள்ளியை நடத்திவரும் "நாட்டிய விஷாரத்" ஸ்ரீமதி விக்னேஸ்வரி ஜெயகாந்தி அவர்கள், இது வரை பல அரங்கேற்றங்களை நடத்தியுள்ளார். தனது அரங்கேற்றங்கள் ஒவ்வான்றுக்கும் தமிழ்நாட்டிலிருந்தும் கனடாவிலிருந்தும் பக்கவாத்தியக் கலைஞர்களை அழைப்பதிலும் அமெரிக்காவிலும் வாழ்ந்துவரும் கலைஞர்களுக்கும் மதிப்பளிக்கும் நோக்கோடும் செயற்பட்டு வருபவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. செல்வி அக்ஷரா ஹரிகரன் அவர்களத பரதநாட்டிய அரங்கேற்றச் செல்வி அக்ஷரா ஹரிகரன் அவர்களது பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு இலங்கையிலிருந்து மிருந்தங்கக் கலைஞரும் பரதநாட்டியக் கலைஞரும் கொழும்பில் சொந்தமாக பரத நடனப் பள்ளியொன்றை நடத்திவரும் திவ்யா சுஜேன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அவர் தனது உரையில் "நாட்டிய விஷாரத்" ஸ்ரீமதி விக்னேஸ்வரி ஜெயகாந்தி அவர்ளையும் அரங்கேற்றச் செல்வி அக்ஷரா ஹரிகரன் அவர்களையும் பாராட்டி தான் எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து பறந்து வந்ததன் பலனை இந்த அரங்கேற்றத்தை மிகவும் அமைதியாகவும் அவதானமாகவும் அமர்ந்திருந்து ரசிப்பதற்கும் அனுபவிப்பதற்கும் கிடைத்த சில மணிநேரத்தில் அனுபவித்தேன்" என்றார் . அவர் தனது உரையில் பரதநாட்டிய அரங்கேற்றம் என்பது ஒரு நடனக் கலைஞரின் பரதப் பயணத்தின் இடை நிலை என்னும் அன்றைய அரங்கேற்ற நாளிலிருந்து தான் அக் கலைஞருக்கு பல பொறுப்புக்கள் வந்து சேர்க்கின்றன என்றும் இனிமேல் தான் தனது குரு மற்றும் பெற்றோர் மற்றும் சுற்றியுள்ள சமூகம் ஆகியோருக்கு தன்னை நிரூபிக்கும் பாரிய கடமை உள்ளது என்றும் தெரிவித்தார்.

தீவிர பயற்சி பெற்ற அரங்கேற்றச் செல்வி அக்ஷரா ஹரிகரன் அவர்களது பரதநாட்டிய உருப்படிகள் அனைத்து கண்களுக்கும் காதுகளுக்கும் மாத்திரமன்றி ஒவ்வொரு பார்வையாளரின் இதயங்களிலும் ஒரு இன்ப அலைகளை தோற்றுவித்தன என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி செல்வி அக்ஷரா ஹரிகரன் அவர்களது பரதநாட்டிய அரங்கேற்றத்தில் எடுக்கப்பெற்ற சில படங்கள் இங்கு காணப்படுகின்றன



# இவ்வார ராசிபலன்

**26-06-2026 வெள்ளி தொடக்கம் 02-07-2026 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** ஏற்றுமதி தொழிலால் லாபம் தரும் வாரம். தாய்வழி உறவில் நன்மை உண்டாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். வெளியூர் பயணம் வெற்றியைத் தரும். நல்லோர் நட்பு கிட்டும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். உத்தியோக இடமாற்றம் உண்டு. பயணம் தடைப்படும். திடீர் செலவு உண்டாகும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். அதிருப்தி அதிகரிக்கும். பால் தானம் செய்வதால் பாவம் போகும். இலக்கிய ஆர்வம் கூடும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புகள் கிட்டும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். கல்வியில் தடை ஏற்பட்டு விலகும். புதிய பொருள் சேரும். காலணிகள் காணாமல் போகும். தாய், தந்தை உதவி உண்டு. வெகுமதி தேடி வரும். வீண் வம்பு ஓடி ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். காரிய வெற்றி கிட்டும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. நல்ல வாய்ப்புகள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். வில்லங்கம் விலகும். தொல்லைகள் அகலும். போட்டிகள் மறையும். தீர்த்த யாத்திரை செல்லும் வாய்ப்பு வரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,9,4,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,C




**ரிஷபம்:** உற்சாகத்தோடு செயல்படும் வாரம். சகோதர ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குதூகலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. தொழில் உற்பத்தி அதிகரிக்கும். நிதி நிறுவனம் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வேண்டிய உதவி கிட்டும். விவசாய நிலம் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். செயல்களில் துணிவு கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். பொறாமைகள் விலகும். வேலை பளு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். பூமியால் லாபம் உண்டு. நற்செய்தி நாடி வரும். தொழில் வாய்ப்பு கூடி வரும். தடைகள் விலகும். புதிய பொறுப்புக்கள் வரும். அரசியலில் பொறுமை தேவை. பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செயலில் வேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். பெரிய திருப்பம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 9,5,2,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,X




**மிதுனம்:** புதிய தொழில் வாய்ப்புக்கள் வரும் வாரம். மாற்று இன நட்பு பெருகும். வேற்று மதத்தினரால் உதவி உண்டு. தோற்றப்பொலிவு கூடும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபக்காரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். வெகுமதி தேடி வரும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் எண்ணம் ஈடேறும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உறவினர் பாராட்டு கிட்டும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு நன்மை தரும். வழக்குகள் சாதகமாகும். அரச வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வியாபாரம் லாபம் தரும். வாழ்த்துச் செய்திகள் வந்து சேரும். சொத்துச் சேர்க்கையுண்டு. ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரண சேர்க்கையுண்டு. மன சந்தோஷம் கூடும். அந்தஸ்து உயரும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். முன்கோபத்தை குறைக்கவும். புதிய முயற்சியில் சற்று கவனம் தேவை. மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் குறையும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டம். நிம்மதி பெருகும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**கடகம்:** தன வரவுகள் அதிகரிக்கும் வாரம். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசுவழி ஆதாயம் உண்டு. நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை குறையும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணம் உருவாகும். தகுதிகள் உயரும். வறுமைகள் ஒழியும். புகழ்ச்சி அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. காரியத்தடை விலகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். குதூகலமான எண்ணம் மேலோங்கும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திருமண வாய்ப்பு கூடி வரும். ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவு அதிகரிக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப் போக்கு விலகும். பூமியால் லாபம் உண்டு. பாதகமான சூழ்நிலை விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வருமானம் பெருகும். புத்திரர் வழியில் நன்மை உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 2,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,V




**சிம்மம்:** சோம்பல் அதிகரிக்கும் வாரம். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புதமான வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். ஆரோக்கியம் அதிகரிக்கும். மாற்று யோசனை பலன் தரும். வேலைவாய்ப்புக் கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். நிம்மதியாக இருப்பீர்கள். உத்தியோக உயர்வு உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மைகள் உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனைத் தீரும். வியாபாரம் சிறக்கும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். தொழில் போட்டிகள் உருவாகி மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். சுயநலம் கூடும். ஸ்திர சொத்து சேரும். முயற்சியில் வெற்றி உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். பணிவான பேச்சுக்கள் தேவை. நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு அதிகரிக்கும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதைகள் நீங்கும். நன்மைகள் பெருகும். பதவியில் பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும். நிர்வாக அலைச்சல் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,T




**கன்னி:** பதவி உயர்வு கிடைக்கும் வாரம். பொருளாதாரம் உயரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். உடன்பிறப்பால் உதவி உண்டு. நண்பர்களால் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கணவன், மனைவி உறவு சீராகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் ஏற்படும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. பெண்கள் பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் முடிவிற்கு வரும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மையுண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பழையகடன் வசூலாகும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். மங்கலச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**துலாம்:** சுப விரயம் ஏற்படும் வாரம். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். பழையகடன் வசூலாகும். மாற்று இன நட்பு பெருகும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆனந்தம் குடிகொள்ளும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித்தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பாதிப்புக்கள் அகலும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வாகன மாற்றம் உண்டாகும். ஆன்மீகச் சிந்தனை அதிகமாகும். பணியில் கண்டிப்பு தேவை. தனவரவுகள் பெருகும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். மேன்மைகள் தொடரும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சாதனை படைக்கும் வாரம். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். மாற்றங்களை சந்திப்பீர்கள். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். பொறாமைகள் அதிகரிக்கும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. ஏற்றங்கள் அமையும். கௌரவம் அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். வெற்றி வீடு தேடி வரும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிராணிகளால் தொல்லை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பண்ணாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,3,5,7
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,K

(தொடர்ச்சி 22 பக்கம்)

# A PHILOSOPHICAL POINT OF VIEW OF KAVIARASU KANNADASAN'S CINEMA TAMIL POEMS

BY: K. ANANTHANATHAN, MA, MSW, RSW
Registered Social Worker with OCSWSSW

BACKGROUND:
As a student of philosophy, I think it is better to explain my understanding of poems in a few words, before writing this article about Kaviarasue Kannadasan's philosophical Tamil cinema songs and 100th Birthday (June 24, 1927, October 17, 1981) celebration and his contribution to Tamil cinema poems from a philosophical point of view. First, I would like to explain briefly Tamil cultural background. What is culture? Culture has been described by a writer as a "way of life" as "sweetness and light", as "activity of thought and receptiveness to beauty and human feeling". These brief descriptions are sufficient to show the comprehensiveness and the indispensability of culture, for one must have a way of life and that way of life should be combined with sweetness and light with beauty and human feeling.

Tamil culture is nothing else but their way of life a pattern of gracious living that has been formed during the centuries of their history. Tamil culture has its worldwide outlook, trade, and navigation, the Tamils eschewed insularity and developed a remarkable universality of outlook and the ideal of the expanding self. Two verses often quoted of Tamil poetry induce one to examine the development of the expanding self within Tamil culture. One is a verse from PURAM. The poem outlines a philosophy of individual dignity, real love, and personal responsibility:

"This world entire is my home,
All mankind my Kinsman,
Nor good nor ill can others do to me,
Sickness and death are nothing new.
Elated we are not by success.
We fret not in defeat, for
Life is a frail boat in a perilous stream
Following its destined course
Seers divine taught us thus-and so
We marvel not at the great
Much less do we despise the low".

Kaniyan Punkunran.
(Verse 192 Purannuru)

The above verse sums up effectively the important aspects of the social, cultural, religious, and philosophical traditions in Tamil culture. Kaviarasar Kannadasan always express and reflected this Tamil real love or unconditional love through his poems, speeches, and writings.

Human life is caught in the ceaseless movement of time, of perpetual coming-to-be and passing-away. The changing forms of human life and of native have captured man's reflective attention in the East and West throughout the ages by shaping the main thrust of his philosophical quest and by posing the basic questions of his religious life. Consider for a moment the perpetual change of role, seen and actor in nature's theater: Summer's growth becomes fall's harvest; night following day, clouds of white alter into ominous thunder heads. Children grow into aged men. Is it surprising that the earliest thinkers were amazed at the transience of all forms and contents of the world, including themselves? Yet such coming to be and ceasing to be essentially define time. In this maelstrom of change man has sought to understand the meaning, of the life given to him and its relationship to the nature of all beings. What I am emphasizing here is that the poet's and the philosopher's questions are the same. Ultimately what is the purpose of human life? Subramanya Bharathi also asking the same question in his poems.

Good poets whatever their time, nationality, and language are exceptional beings and carriers of divine truth. The only significant difference from poet to poet is perhaps the difference in the chronology of their lives. In the external forms of poetry, such as technique and style, certain differences may exist among them; but all true poets belong to the one unit and whole of poetic genius. Each poet in his own manner brings to this world a new message, a new form of reality. This message is the truth of creation. A poet tries to express this ultimate reality in order to inspire human beings. hThis reality is expressed in a language that is suited for a period in time and for social way of thinking. It is because reality is affected by units of time, tradition, and society, that a poet attempts to express this reality in terms of those units.

As poetry can distil the sensuous enjoyment of all the senses and as it is born in the very deep experience of those senses ultimately perceiving the aspect of ultimate reality, it carries with the intoxication of liquor, the sweetness of a limitless firmament. Poetry is born over a very deep experience of the senses, the intellect, the mind as well the spirit. Without separating the joy or the sorrow of the world, a poet looks at life, at the completeness of the world of joys and sorrows. One who merely looks at the joy of life and runs away from its sorrows cannot be a true poet; on the contrary poetry is the expression of the frenzy arising from the intoxication of life. Poetry is born of the experience of the harmonies of the world and great passion that emanates from experiencing the tiniest joys of the universe. Not only joy, but sorrow too is a note in the harmony of the world. The above aspects we can clearly see in the works of Kaviarasar Kannadasan. The life vision of completeness of life is the primary experience of Indian poetry. Kaviarasar Kannadasan belongs to this group of Indian poets as I mentioned in this article earlier like Maha Kavi Subramanya Bharathi who perceived life as whole and complete

BRIEF BIOGRAPHY OF KAVIARASU KANNADASAN:

Kannadasan (means Servant of Lord Krishna) June 24, 1927 – October 17, 1981, was a Tamil poet and Tamil Film Lyricist, who was one of the greatest most important Tamil poet after Mavakavi Subramanya Bharathiyar in the Tamil language. Frequently called Kaviarasu (king of poets), was most familiar for his song Lyricist in Tamil films over fifty years and contributed around 5000 Tamil film Lyrics apart from 6000 Tamil poems and 232 books, popular being the 10 parts religious essay on Hinduism (Arthamulla Indhumatham). He was a poet, novelist, Lyricist, politician, film producer, literary editor. His original name was A.L. Muthiah, born in Sirukoodaipathi, Tamil Nadu, South India. Died October 17, 1981 Chicago, in United States. Knnadsan fathered 15 kids in all , by his three wives. He was a prolific poet and prolific father as well. He died at the age of 56 on October 17, 1981in America.

Kaviarasu Kannadasan, the great Lyricist, is still remembered for his embellished language. "I am permanent, I will remain forever"-these are the words of the legend Lyricist that are remembered even today, thanks to his wer-green Lyrics. We feel proud of him. Kannadasan was born on June 24, 1927 to the couple Saththappa Chettiar-Visalakshi as their eighth child. His given name was Muthiah servant of Lord Krishna. Later he changed his name to Kannadasan when he started writing poetry. Born in Sirukudalpatti, in Ramanathapuram District. Kannadasan was given in adoption Pazhaniyappa Chettiar -Sikappiach, couple belonging to Muthupattinam. He was put Mr. Gurukulam High Secondary School in Amaravathiputhier near karaikudi. But his education was discontinued after grade 8 as they could not afford further education. But Kannadasan took great efforts at developing his skills and improving his knowledge.

Thanks to his efforts, he joined as the editor of "Thirumagai", a magazine published from Pudukottai, at his young age at 17. His poems were published in that magazine. And, he became the editor of "Thirai Oli" in the year 1945 to became the editor of "Chandamarutham", a magazine, published by Modern Theatres in 1947. Later he resigned from "Chandamarutham" with the goal of becoming Cinima Lyricist and met the concerned people in Jupiter Pictures at Coimbatore. At that time, the film "Kanniyin Kaadhali" was in the making Mr. K. Rammanathan was directing the film. Kaviarasu Kannadasan wrote songs and got introduced to the director by Mr. Venkatasamy, the husband of actress U. R. Jeevarathnem. His Lyrics were approved. His song "Kalangathiru Maname" was sung for heroine Maduradevi by playback singer T. V. Rathinem. Kaviarasu Kannadasan's first song itself became a hit. And, he started writing dialogues also for Tamil movies. In the meantime, he plunged into politics too. And, subsequently, he became a film producer too. His first production was "Maalaiyitta Mangai" Archi Manorama, who was a stage artiste that time, was introduced to cinema
through this film.

SIGNIFICANCE OF HIS PHILOSOPHICAL FAMOUS CINEMA SONGS:

Ponal Pohattum Poda – Intha
Poomiyil Nilaiyai Vazhanthavar – Yaarada
Vanthathu Theriyum Povathuenge
Vaasal Nmakke theriyathu
Vathavellam Thankividdal – Intha
Mannil Namakke Idamtethu
Vazhkai Enpathu Viyaparam – Varum
Jananam Enpathu Varavahum – Athil
Maranamenpathu Selavaahum

English Translation:

Let the Passions and bonds Pass by
Who has lived in this land – Forever?
Path of Arrivals is Known – But
Path of Departure and the route – Unknown
If all who Came opt to stay
Where is the Space in this Sphere?
Life is just a Business – In which
The Birth is Credit and
Death is Debit

Addai Inri Piranthome Assaiinri
Piranthoma?
Adai Mudikkaiyile Alli Chenror
Yaarumundo?

English Translation:

Though Born without a Dress
Did we come without Passions?
When we complete the Merriment
Can anyone carry their Possessions?



Veedu Varai Uravu
Veethi Varai Manaivi
Kadu Varai Pillai
Kadaisi Varai Yaaro?

English Translation:

The children, till the house
The wife, till the street
The son, up to the cemetery
Who will come beyond that?

Ullam Enpathu Aamai – Athil
Unmai Enpathu Oomai
Solil Varuvathu Paathi – Nengil
Thoonkikidappathu Neethi

English Translation:

Mind is like a Tortoise in which
The Truth hides in silence
Words can Bring out only the half
While Justice calmly sleeps

Assaiye Alai Pole
Naamellam Athanmele
Odam Pole Adiduvome – Vaazhkailile
Paruvam Ennum Kaatrrile
Parakkum Kaathal Therile
Aanum Pennum Mahizhvar
Suham Pervvar – Athisayam Kaanpaar
NaallIai Ulahin Paathaiyai Inru
Yaar Kaanuvar?

English Translation:

With Passions as waves
We dance like the boat
In our passage of life
With the wind of youth
By flying in the chariot of love
Men and woman make merry enjoy
And surprise themselves
But who can guess tomorrow's path
Today itself?

Kaviarasu Kanadasan through these poems trying to reinforce the theme "Sorrows are credit of life while the joys are debit, with the balance being mere dreams, and who can comprehend the arithmetic of fate".

CONCLUSION:

Kaviarasu Kannadasan is a great accomplisher, having written more than 10,000 songs. Apart from film songs he has written devotional songs, poems, articles, short stories, novels, biographies etc. Totaling around 10,000 poems. Kaviarasu Kannadasan had the integrity and courage to share his views with others. We all should read his books and poems.

They are treasures in the sense that they will clarify all our philosophical doubts and render clarity and calmness of mind. Kaviarasue Kannadasan came to America in July 1981 to participate in the function organized by Tamil Sangam and in the Poet's conference there, he suddenly developed chest pain and was admitted to a hospital in Chicago town on 24th July 1981 and was given treatment. But he did not respond to the treatment and died on 17th October 1981. He was only 56 years when he died. His body was brought to Chennai with the help of then chief minister MGR and was cremated the next day.

Today, he is not physically presence, but his philosophical writings will stand the test of time and will remain forever in the hearts of the Tamils all over the world. His works prove his words, "I am permanent, I have no death at any point in time". Though Kaviarasu Kannadasam is no more his song writing and his famous cinema and other poems remain in hearts and minds of his fans and Tamils all over the world. As he mentioned, He is permanent, and he has no death through his eternal Tamil songs and philosophical writings. His publications and poems will amply testify to that. And I also add that Kaviarasu Kannadasan was a distinguished philosopher in his own right and a thinker possessed of powerful mind. He has also a great understanding of Hinduism, philosophical issues from a classical Tamil perspective which I have rarely seen matched. Particularly, his ten parts on Hinduism (Arthamulla Indu Matham). He is one of the kinds of poet who are proficient in Classical Tamil and philosophy in our recent Tamil poets. And, most of all he is a wise man.

Special Article for his 100th Years Birthday celebration.

# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** சுபசெய்தி வரும் வாரம். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரம். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பாதகமான சூழ்நிலை விலகும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களைகட்டும். யோகமான காலம். ஆடை, அணிகலன்கள் சேரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். திருப்புமுனை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். விரயங்கள் அதிகமாகும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். சாதனையான எண்ணம் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q

**தனுசு:** மாற்றங்கள் நிகழும் மகத்தான வாரம். வெகுமானம் கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். வெற்றிச்செய்தி வரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. மனோ பயம் அகலும். வினோதமான எண்ணங்கள் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பாராட்டுக்கள் அதிகமாகும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். நண்பர்கள் உதவி கிடைக்கும். திருமண வாய்ப்பு வரும். பொறியியல் துறை லாபம் தரும். செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். கனவுகள் பலிதமாகும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். பணவிரயம் ஏற்படும். தேகப்பலம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X

**மகரம்:** நலம் விளையும் வாரம். நன்மைகள் அதிகமாகும். நட்புகள் பெருகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச் செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் வெளிப்படும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கடன் பிரச்சனை உருவாகும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். உள்ளம் மகிழும். மனைவியால் அமைதி உண்டாகும். முக்கிய எண்ணம் நிறைவேறும். உடன் பிறந்தோரால் உதவி உண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. சுப காரிய செய்தி வரும். வேலைபளு அதிகரிக்கும். தொழில் மாற்றம் ஏற்படும். சந்தோஷம் அலைமோதும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச்சலுகைகள் கிட்டும். தொழில் போட்டி மறையும். சோதனைகள் குறையும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். பணிமாற்றம் ஏற்படும். பெருமைகள் தேடி வரும். வெற்றிகள் குவியும். அரசு வகை ஆதாயம் கிட்டும். பழிச்சொல் தேடி வரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். புத்தி சாதுர்யம் கூடும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். தீய எண்ணம் விலகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு உதவிகள் கிட்டும். வில்லங்கம் விலகும். செயல்திறமை வெளிப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,T

**கும்பம்:** எச்சரிக்கையோடு செயல்பட வேண்டிய வாரம். எதிலும் நிதானம் தேவை. எடுத்தக் காரியம் தடைப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து கூடும். பூர்வீக சொத்து சேரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். விவசாயம் மேன்மை பெறும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். காரியம் கைக்கூடும். தொழில் லாபம் கிட்டும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். உழைப்பு உயர்வு தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். வீண் வம்பு விலகும். நிதி நிலைமை சீராகும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் விலகும். கொடுக்கல், வாங்கலில் நன்மை உண்டாகும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கை கொடுக்கும். தொலைதூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கெடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். சுபக்காரியம் கைகூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். வேற்று மதத்தினரால் உதவிகள் உண்டு. தோற்றப்பொலிவு கூடும். மாற்று எண்ணம் உதயமாகும். அளவான பேச்சு நன்மை தரும். பயணம் நன்மை தரும். மங்களகரமான காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,T

**மீனம்:** சாதனை படைக்கும் வாரம். சோதனைகள் நீங்கும். சகோதர உறவு பலப்படும். சந்தோஷம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடிகள் தீரும். வீண் செலவு கூடும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடுரூபவ் மனை யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வாய்ப்புக்கள் தேடி வரும். புதிய தொழிலமையும். தனவரவு பெருகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். இனிக்கும் சம்பவம் அமையும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வெற்றிக்கான வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். திக்கற்ற நிலை மாறும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். பொருள் நஷ்டம் ஏற்படும். வேலைபளு கூடும். அரசியல் ஆதாயம் உண்டு. குடும்ப சச்சரவு ஏற்படும். பணியில் கவனம் தேவை. சங்கடம் அதிகமாகும். வருமான வரி தொல்லை ஏற்படும். விரோதம் ஏற்படும். படிப்பில் ஆர்வம் கூடும். ஆரோக்யம் சீராகும். தெய்வீகப் பற்று கூடும். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிதி நிலைமை சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மதுரை மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,X

# 20 வயதிற்குட்பட்ட பெண்கள் மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் இலங்கையின் தேசியமட்ட தரத்திற்கு தெரிவான நடேஸ்வராக்கல்லூரி

## இந்த மாணவிகளுக்கான அனுசரணையை, கடந்த 15 வருடங்களாகக் கனடாவில் இயங்கிவரும் கல்லூரியின் கனடா பழையமாணவர் சங்கத்தினர் வழங்கி வருகின்றனர்!

**- குரு அரவிந்தன்**




வடமாகாணப் பாடசாலைகளுக் கிடையிலான 20 வயதிற்குட்பட்ட பெண்கள் மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டி கடந்த 15, 16 ஆம் திகதிகளில் பாலிநகர் ம.வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மேற்படி போட்டியில் காங்கேசந்துறை யாழ் நடேஸ்வரக்கல்லூரி பெண்கள் அணியினர் வரலாற்றில் முதற்தடவையாக சம்பியனாகி தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகி பாடசாலைக்கும் பாடசாலை சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்களை பாடசாலை சமூகம் சார்பாகவும், பழைய மாணவர் சங்கங்கள் சார்பாகவும் வாழ்த்துவதில் நாம் பெருமை அடைகின்றோம். 20 வயதிற்குட்பட்ட பெண்கள் மென்பந்துத் துடுப்பாட்ட அணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்த கல்லூரி அதிபர் திரு. பா. பாலகுமார், பயிற்றுவிப்பாளர் திரு. இ.ஜீவராஜ் விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு. பா. பாலகிருஸ்ணன், ஆசிரியை திருமதி. தர்சினி கிறிஸ்ரி நிறஞ்சன், ஆசிரியர் திரு. கு. தர்மபாலன், ஆசிரியர் திரு. சி. ரவிசாந் ஆகியோருக்கும் எமது மனம் நிறைவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

125வது ஆண்டு நிறைவை இந்த வருடம் கொண்டாடிய காங்கேசந்துறை நடேஸ்வராக்கல்லூரி போர்ச் சூழல் காரணமாக 1990 ஆம் ஆண்டு பல்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து, தற்போது 2016 ஆம் ஆண்டு தொடக்கம் திரும்பவும் பழைய இடமாக கல்லூரி வீதியில் அமைந்திருக்கிறது. அதிபாதுகாப்பு வலயத்திற்குள் தற்போதும் இருப்பதால் அனேகமான மக்கள் இடம் பெயர்ந்திருப்பதால், மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. 1980 களில் 1500 மேற்பட்ட மாணவர்கள் நடேஸ்வராக் கல்லூரியில் கவ்விகற்றது நினைவு கூரத்தக்கது.

20 வயதிற்குட்பட்ட பெண்கள் மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டிக்கான அனுசரணையை, கடந்த 15 வருடங்களாகக் கனடாவில் இயங்கிவரும் கனடா பழையமாணவர் சங்கத்தினர் வழங்குவது குறிப்பிடத்தக்கது.



# தமிழ் தேசிய அரசியலில் ஒரு "அசிங்கம்" அது வேறு யாருமல்ல. அர்ச்சுனா எம்.பி என்ற "மனநோயாளி"!

“போரில் தோற்றாலும் இலட்சியத்தில் தோற்காத தமிழினம்”என நாம் மார்தட்டுகையில்,அர்ச்சுனா எம்.பி என்ற மனநோயாளி பேரினவாதத்தின் கைக்கூலியாக, தமிழ் தேசியத்தையும் தமிழ் தேசியவாதிகளையும் இழிவுபடுத்தி தமிழ் தேசியத்தை பலவீனமடைய வைக்கும் திட்டமிட்ட சதிக்கு இந்த அரசியல் கோமாளிக்கு , வாக்களித்த ஒவ்வொரு தமிழனும் பொறுப்பேற்க வேண்டும்”---கே.பாலா

தமிழ் தேசியத்திற்கான,தமிழர் உரிமைக்கான போராட்டமும் எழுச்சியும், உணர்வும்,குரலும் பலவீனமடைந்து வரும் நிலையில் அதனை அடியோடு அழித்தொழிக்கும் வகையில் வழமைபோன்றே தமிழர் தரப்பிலுள்ள சில “வி‘ச் செடி”களை, “இனத் துரோகி”களை தற்போதைய அநுரகுமார அரசாங்கமும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளதா என்ற சந்தேகத்தை வலுப்படுத்தும் விதமாக தற்போது தமிழர் தேசத்தில் இந்த அநுரகுமார அரசாங்கத்தின் தலைமையில் நடக்கும் மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் தமிழ் தேசிய அரசியல்வாதிகளுக்கு எதிரான “பொத்தடா வாயை...தூக்கி அடிப்பேன்டா நாயே..” என்ற வார்த்தைப் பிரயோகங்களும் அசிங்க அரசியல் நடவடிக்கைகளும் தீவிரம் பெற்று வருகின்றன.

தமிழ் தேசிய இனத்தைப் பொறுத்தவரை இலங்கை என்று சுதந்திரம் அடைந்ததோ அன்றுமுதல் இன்றுவரை எதிரிகளால் வீழ்த்தப்பட்ட வரலாறுகளை விட துரோகிகளினால் முதுகில் குத்தப்பட்ட வரலாறுகள்தான் அதிகம் . அதிலும் அந்தத் துரோகிகள் தமிழ் தேசிய இனத்துக்குள்ளிருந்தமையே இன்றுவரை தொடரும் தமிழ் தேசிய இனத்தின் அவலம். அந்த வகையில் அன்றைய அமிர்தலிங்கம் முதல் இன்றைய அர்ச்சுனா வரை இந்த துரோகிகள் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

தமிழினத் துரோகிகளில் பலர் இலங்கை அரசாங்கங்களுடன் இணைந்து வெளிப்படையாகவே தமிழ் தேசிய இனத்திற்கு துரோகம் செய்தவர்களாக ,தமிழ் தேசிய இனத்தை ,போராட்டத்தை காட்டிக்கொடுத்தவர்களாக இருந்தவர்கள் ,இருக்கின்றவர்கள். ஆனால் தமிழ் தேசிய இனம் தற்போது இதுவரை சந்தித்திருக்காத ஒரு விசித்திர, மன நிலை பாதிக்கப்பட்ட ஒரு தமிழினத் துரோகியை,தமிழினத்தை காட்டிக்கொடுப்பவரை, தமிழ் தேசியத்தை இழிவுபடுத்துபவரை , பேரினவாதத்தை மகிழ்வடைய வைப்பவரை எதிர்கொண்டுள்ளது. அவர்தான் சுயேட்சைக்குழு 17 இன் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான அர்ச்சுனா இராமநாதன்.

யாழ்மாவட்ட மக்களின் குறிப்பாக தென்மராட்சி மக்களின் முட்டாள்தனத்தினால் எம்.பி.யாகி “ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்” என்பதுபோல் உள்ள இந்த அர்ச்சுனா இராமநாதன் என்னும் நபரினால் ஒட்டு மொத்த தமிழ் தேசிய இனமும் வெட்கித் தலைகுனியும் நிலைமைகள் மாவட்ட , பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மூலம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் இடம்பெறும் மாவட்ட , பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் இந்த அர்ச்சுனா என்ற எம்.பி.யினால் சந்தி சிரிக்கும் வகையில் தான் தற்போது நடந்தேறி வருகின்றன.

பாராளுமன்றம்,மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் என அனைத்து இடங்களிலும் தமிழ் தேசத்திற்கு எதிராகவும் தமிழ்
தேசிய அரசியல்வாதிகளுக்கு எதிராகவும்
தமிழின உணர்வாளர்களுக்கு எதிராகவும் வெறிபிடித்த ,பைத்தியக்கார , கோமாளித்தனங்களின் ஒட்டுமொத்த உருவமாக இழிவான வார்த்தைப்பிரயோகங்களை பயன்படுத்தியும் ,காட்டுக்கூச்சல்களைப் போட்டும் சண்டித்தனங்களை காட்டியும் குழப்பங்களை விளைவித்தும் பேரினவாதத்திற்கு ஆதரவாகவும் செயற்பட்டுவரும் இந்த நபரினால் தமிழ் மக்களைப்பார்த்து ஏனைய சிங்கள ,முஸ்லிம் மக்கள் கைகொட்டி சிரிக்கின்றனர்.

இதில் அண்மையில் நடந்த வலிகாமம் வடக்கு பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் போன்றவற்றில் அர்ச்சுனா என்னும் இந்த நபர் சக பாராளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பிரதேச மக்கள் பிரதிநிதிகளை விழித்து பயன்படுத்திய வார்த்தைகள் இந்நபரின் “மனநிலை” தொடர்பில் மக்களுக்கிருந்த சந்தேகத்தை உறுதிப்படுத்தியுள்ளதுடன் இவரின் எல்லை மீறிப்போகும் தமிழ் தேசிய அரசியல்வாதிகளுக்கு எதிரான செயற்பாடுகள், நடத்தைகள் தமிழ் மக்களை பொறுமையின் எல்லைக்குத் தள்ளியுள்ளன.

தனது கருத்தில் மற்றவர்கள் முரண்படும்போது அதற்கு பதிலளிக்க முடியாமல் சேறுபூசல்களையும்,பொய் ,புரட்டுக்களையும் அவிழ்த்துவிட்டு வன்முறையையும் மிரட்டலையும் வெளிப்படுத்தும் மொழியைப் பயன்படுத்தியும் தான் முரண்படுபவர் அல்லது தன்னுடன் முரண்படுபவரின் குடும்பங்களை பொது வெளியில் இழுத்து கொச்சைப்படுத்தியும் கேவலப்படுத்தியும் அசிங்க அரசியல் செய்துவரும் இந்த அர்ச்சுனா எம்.பி அண்மையில் நடந்த வலிகாமம் வடக்கு பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினரான கஜேந்திர குமார் பொன்னம்பலத்தை “தூக்கி அடிப்பன் டா நாயே, வாயை மூடு” எனப்
பேசியது நிச்சயமாக கலாசாரச் சீர்கெட்ட குடும்பப் பின்னணியில் இருந்து வந்த ஒருவரால்தான் முடியும்.

அதுமட்டுமன்றி அங்கிருந்த மக்கள் பிரதிநிதிகளை “வாயை மூடுடா,சத்தம் போடாமல் இருடா, நீ என்ன பைத்தியக்காரனா” என ஒரு மன நோயாளிபோல் தான் பாவித்த கேவலமான வார்த்தைகள் மக்களிடம் விசனங்களையும் கடும் கண்டனங்களையும் விமர்சனங்களையம் ஏற்படுத்தியுள்ளதால் அந்த கேவலமான வார்த்தைப் பிரயோகங்களை நியாயப்படுத்த அந்த அர்ச்சுனா என்ற நபர் இன்னொரு “ஏஐ” (**AI**) பித்தலாட்ட வேலையையும் செய்து ஒட்டு மொத்த தமிழ் மக்களையும் முட்டாள்களாக்கவும் முயன்றுள்ளார்.

அர்ச்சுனா என்ற அந்த பித்தலாட்டக்கார நபர் தனது முக நூலில்
“பொத்தடா வாய்!” “ஜீ.ஜீ.”நீ பொத்தடா வாய்!
“அமிர் -எனத் தலைப்பிட்ட முன்னர் தமிழ் மக்களிடம் பிரசித்தம் பெற்றிருந்த சுதந்திரன் பத்திரிகையின் முகப்பு பக்கத்தை வெளியிட்டு “பாராளுமன்றத்திலேயே உங்கள் ஆட்கள் காட்டிய ஒழுக்கத்தை நாடே பார்த்திருக்கிறது. அதற்குப் பிறகும் ஒழுக்கம் பற்றி நீங்கள் பேசுவது முரண்பாடாகத்தான் தெரிகிறது. தூக்கி அடிக்காமல் விட்டது என் பிழைதான் போல”னப் பதிவிட்டுள்ளார் .

இந்த அர்ச்சுனா என்ற நபர் தனது
முகநூலில் பதிவிட்ட “சுதந்திரன்” பத்திரிகை படத்தில் செவ்வாய், 24 மே 1968 என பதிவிடப்பட்டிருக்கின்றது. ஆனால் நாள் காட்டியின் அடிப்படையில் 1968 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி என்பது வெள்ளிக்கிழமையே வருகின்றது. அடுத்து, அந்த படத்தில் உள்ள செய்தியில் அமிர் என்று குறிப்பிட்டு இருந்தாலும் அது அமைச்சர் அமிர் எனத் தெளிவாக கூறுகின்றது.1956 ஆம் ஆண்டில் இருந்து அமிர் என அழைக்கப்பட்ட அப்பாப்பிள்ளை .அமிர்தலிங்கம் பதவியில் இருந்தாலும் அவர் அமைச்சராக இருக்கவில்லை என்பதால் அர்ச்சுனா என்ற நபர் வெளியிட்டது ”ஏஐ”யில் உருவாக்கப்பட்ட சுதந்திரன்” பத்திரிகை என்பது தெளிவாகின்றது.

இந்த பதிவு தொடர்பில் மூத்த ஊடகவியலாளரான என். வித்தியாதரன், “அர்ச்சுனா என்ற நபர் வெளியிட்டுள்ள இந்த போலி சுதந்திரன் பத்திரிகையைப் பார்த்ததுமே அந்த நாளிதழ்தயாரிப்பு பொய் என்பது எல்லோருக்கும்தெரிகிறது. குறிப்பிட்ட திகதியில் கிழமை பிழையாக உள்ளது. அமிர்தலிங்கம் எப்பொழுதும் அமைச்சரானவரே அல்லர். இதில் வேடிக்கை என்னவென்றால் ஏஐ மூலம் பழைய பத்திரிகை ஒன்றை தயார் பண்ணியவர்களுக்கு யார் அமிர்தலிங்கம், அவரது படம் எது, அவர்அமைச்சராக இருந்தாரா என்பவைபோன்ற அடிப்படை அரசியல் அறிவுகூட இருக்கவில்லை.

ஆயினும், இதில் இன்னொரு விடயம் உண்டு. அதே தலைப்புடன் கிழமை குறிப்பிடாமல் திகதி மட்டும் குறிப்பிட்ட சுதந்திரன் நாளிதழ் ஒன்று 1968 ஆம் ஆண்டு பிரசுரமாகி இருக்கின்றது. அதை வைத்துக் கொண்டுதான் இந்த உல்டா பிரதியைச் சிலர் தயாரித்திருக்கின்றனர். “பொத்தடா வாயை!” என்ற பிரச்சினை பாராளு ளுமன்றில் அப்போது எதிரொலித்துத்தான் இருக்கின்றது . ஆனாலும் இப்போது ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களில் இடம்பெறும் அளவுக்கு அப்படி ஒன்றும் கேவலமான நிலைக்கு செல்லவில்லை “என்று கூறுகின்றார்



சரி அதனை விடுவோம்.யாழ் மாவட்டத்தில் இடம்பெறும் மாவட்ட ,பிரதேச பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் கோமாளிகளின் கூடாரங்களாக மாறுவதற்கு இந்த அர்ச்சுனா என்ற நபர் மட்டும் தான் காரணமா அல்லது அவரின் மன நிலையை சோதிக்கும் வகையில் முரண்படும் சக எம்.பி.க்கள் காரணமா என்றால் இவர்கள் இருவரையும் விட பிரதான காரணமாக இவ்வாறான மாவட்ட, பிரதேச பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு தலைமைதாங்கும் அரச தரப்பின் கையாலாகாத்தன, ஆளுமையற்ற ,அனுபவமற்ற அமைச்சர்.எம்.பி.க்கள்தான் உள்ளனர் .

இத்தகைய மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை ஒழுங்கு முறையாக நடத்த வேண்டிய பொறுப்பு கூட்டத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவருக்குண்டு . தலைமை தாங்குவார் அந்த ஆசனத்தில் இருந்து ஆளுமையுடன் கூட்டத்தை நடத்த முடியாவிட்டால் கூட்டத்திலிருந்து முதலில் வெளியேற வேண்டியவர் அவர்தான், ஆனால் தற்போது கூட்டங்களுக்கு தலைமைதாங்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை சேர்ந்த அமைச்சர்,யாழ் மாவட்ட எம்.பி.க்கள் “பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுபவர்களாகவே” உள்ளனர்.

சரியான , பொறுப்பான, தகுதியான தலைமைத்துவம் இல்லாது இவ்வாறான கூட்டங்கள் நடப்பதாலேயே இக் கூட்டங்கள் கோமாளிகள் கூடும் இடங்களாக மாறி வருகின்றன.அத்துடன் இதற்குள் அரசியலும் உண்டு. அதாவது அருவருக்கத்தக்க வகையில் பேசுவது,மோதுவது, வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவது தமிழ் தேசியம் என்ற பெயரில் தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பதால் அமைச்சர்,அரச தரப்பு எம்.பி.க்கள் இவர்களை மோத விட்டு .அசிங்கப்படவிட்டு,அவமானப்படவிட்டு வேடிக்கை பார்த்து குளிர் காய்கின்றார்கள்,

இதில் இன்னொரு இலாபமும் அரசதரப்பிற்கு உண்டு. அதாவது யாழ் மாவட்டத்தில் இடம்பெறும் , மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் இந்த அர்ச்சுனா என்ற நபர் செய்யும் பைத்தியக்காரத்தன நடவடிக்கைகள்,குழப்பங்களினால் எந்த வொரு கூட்டத்திலும் மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்படாமல் , மக்கள் பிரச்சினைகள் பேசப்படாமல் குழப்பங்களிலேயே முடிவடைகின்றன. இதனால் பல பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க வேண்டிய நெருக்கடி, தேவை,பொறுப்பு அரசுக்கு இல்லாமல் போகின்றது. அதனாலும் அர்ச்சுனா என்ற நபரை கட்டுப்படுத்தாமல் அரசாங்கத்தரப்பு அவரைப்பயன்படுத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளை, தேவைகளை தீர்ப்பதிலிருந்து நழுவிச் செல்கின்றது என்பதும் உண்மை.

தமிழீழத்திற்காக, தமிழ் தேசிய இனத்திற்காக,அதன் உரிமைகளுக்காக பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர் ,யுவதிகள் தமது உயிர்களையும் இன்னும் ஆயிரக்கணக்கானோர் தமது அவயவங்களையும் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் தமது உயிர்களையும் பல இலட்சம் கோடி ரூபா சொத்துக்களையும் தியாகம் செய்து “போரில் தோற்றாலும் இலட்சியத்தில் தோற்காத தமிழினம்” என மார்தட்டுகையில்,அர்ச்சுனா எம்.பி என்ற மனநோயாளி பேரினவாதத்தின் கைக்கூலியாக, தமிழ் தேசியத்தையும் தமிழ் தேசியவாதிகளையும் இழிவுபடுத்தி தமிழ் தேசியத்தை பலவீனமடைய வைக்கும் திட்டமிட்ட சதிக்கு இந்த அரசியல் மன நோயாளிக்கு வாக்களித்த ஒவ்வொரு தமிழனும் பொறுப்பேற்க வேண்டும்.




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524




29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்




உதயம் 1577 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 26, 2026

# கனடிய தமிழ்ச் சமூகத்திற்கு கிடைத்துள்ள மற்றுமொரு சட்டத்தரணி ஜொனா ராஜ்குமார் விரைவில் தனது அலுவலகத்தை ஆரம்பிக்கவுள்ளார்!



கனடாவில் பல்வேறு துறைகளில் முன்னேறி வருகின்ற எமது கனடிய தமிழ்ச் சமூகத்திற்கு கிடைத்துள்ள மற்றுமொரு சட்டத்தரணி ஜொனா ராஜ்குமார் விரைவில் தனது அலுவலகத்தை ஆரம்பிக்கவுள்ளார் என அறியப்படுகின்றது.
இங்கிலாந்தின் லெஸ்டர் பல்கலைக் கழகத்தில் சட்டமாணிப் பட்டத்தைப் பெற்று பின்னர் ஒன்றாரியோவில் அதற்குரிய அனுமதியையும் சான்றிதழையும் பெற்று கனடாவில் தனது சட்டத் தொழிலை ஆரம்பிக்கும் தகுதியைப் பெற்றுள்ள ஜொனா ராஜ்குமார் அவர்கள் ரொறன்ரோ வாழ் வர்த்தகர் ராஜ் ராஜரட்னம் -சுமதி ராஜ்குமார் தம்பதியின் புதல்வராவார். அன்னாரை வாழ்த்த விரும்புவோர் 416 953 6925 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

# அமெரிக்காவின் நியுயோர்ககில் நடைபெற்ற ஸ்ரீமதி விக்னேஸ்வரி ஜெயகாந்தி ஆசிரியையின் மாணவி செல்வி அக்ஷரா ஹரிகரனின் பரதநாட்டிய அரங்கேற்றம்!






அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் கடந்த 20-06-2026 அன்று சனிக்கிழமை நடைபெற்ற “நாட்டிய விஷாரத்“ ஸ்ரீமதி விக்னேஸ்வரி ஜெயகாந்தி அவர்களின் மாணவி செல்வி அக்ஷரா ஹரிகரன் அவர்களது பரதநாட்டிய அரங்கேற்றம் இசையும் கலையும் பரதமும் கலந்த ஒரு தெய்வீக மேடை நிகழ்வாக நடைபெற்றது.
நீண்ட காலமாக அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் “ருக்மினி நர்த்தனாலயம்“ என்னும் பரத நடனப் பள்ளியை நடத்திவரும் ஸ்ரீமதி விக்னேஸ்வரி ஜெயகாந்தி அவர்கள், இது வரை பல அரங்கேற்றங்களை நடத்தியுள்ளார்.
செல்வி அக்ஷரா ஹரிகரன் அவர்களத பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கு இலங்கையிலிருந்து மிருதங்கக் கலைஞரும் பரதநாட்டியக் கலைஞரும் கொழும்பில் சொந்தமாக பரத நடனப் பள்ளியொன்றை நடத்திவரும் திவ்யா கஜேன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (தொடர்ச்சி 19ம் பக்கம்)

# தமிழ் தேசிய அரசியலில் ஒரு "அசிங்கம்" அது வேறு யாருமல்ல. அர்ச்சுனா எம்.பி என்ற "மனநோயாளி"!




“போரில் தோற்றாலும் இலட்சியத்தில் தோற்காத தமிழினம்““என நாம் மார்தட்டுகையில்,அர்ச்சுனா எம்.பி என்ற மனநோயாளி பேரினவாதத்தின் கைக்கூலியாக, தமிழ் தேசியத்தையும் தமிழ் தேசியவாதிகளையும் இழிவுபடுத்தி தமிழ் தேசியத்தை பலவ-ீனமடைய வைக்கும் திட்டமிட்ட சதிக்கு இந்த அரசியல் கோமாளிக்கு , வாக்களித்த ஒவ்வொரு தமிழனும் பொறுப்பேற்க வேண்டும்““---கே.பாலா
தமிழ் தேசியத்திற்கான,தமிழர் உரிமைக்கான போராட்டமும் எழுச்சியும், உணர்வும்,குரலும் பலவீனமடைந்து வரும் நிலையில் அதனை அடியோடு அழித்தொழிக்கும் வகையில் வழமைபோன்றே தமிழர் தரப்பிலுள்ள சில “விஷச்செடி”களை, ““இனத் துரோகி““களை தற்போதைய அநுரகுமார அரசாங்கமும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.
(தொடர்ச்சி 23ம் பக்கம்)




# அமெரிக்கா வாழ் ஈழத்து எழுத்தாளர் விக்டர் ராஜலிங்கம் எழுதிய "உலகின் மூத்தமொழி தமிழ்" என்னும் கட்டுரைகளின் தொகுப்பு நூல் ஸ்காபுறோவில் வெளியிடப்பெறுகின்றது

அமெரிக்கா வாழ் ஈழத்து எழுத்தாளர் விக்டர் ராஜலிங்கம் எழுதிய “உலகின் மூத்தமொழி தமிழ்“ என்னும் கட்டுரைகளின் தொகுப்பு நூல் ஸ்காபுறோ-வில் எதிர்வரும் 28-06-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு 1173 பிரிம்லி வீதி ஸ்காபுறோ என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **'QUEEN PALACE BANQUET HALL** மண்டபத்தில் வெளியிடப்பெறுகின்றது.
பல விமர்சகர்கள் மற்றும் பேச்சாளர்கள் கலந்து கொள்ளவுள்ள இந்த நூல்வெளியீட்டு விழாவில் கலை நிகழ்ச்சிகள் மற்றும் இராப்போசன விருந்து ஆகியன அமையவுள்ளன. நூல்வெளியீட்டு விழா தொடர்பான விபரங்களுக்கு 416 732 9046 அல்லது 647 285 7570 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் இவ்வருடத்துக்குள் நீக்கப்படும் என நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு

- ந.லோகதயாளன்.

இலங்கையில் நீண்டகாலமாகப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த பயங்கரவாதத் தடைச் சட்டம் இந்த வருடத்துக்குள் நீக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க நாடாளுமன்றத்தில் இன்று அறிவித்தார்.
இதற்குரிய முதற்கட்ட மற்றும் சட்டரீதியான ஏற்பாடுகளை நீதி அமைச்சு தற்போது மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது என்றும் அவர் சபையில் வெளிப்படுத்தினார்.
நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு மிக முக்கியமான அறிவிப்பை விடுத்தார். அங்கு ஜனாதிபதி மேலும் உரையாற்றியதாவது:
“எமது நாட்டின் வரலாற்றில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்தி, சிவில் சமூக அமைப்புகளும் பொதுமக்களும் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். நீண்டகாலமாகவே இந்த நியாயமான கோரிக்கை பல்வேறு தரப்பினராலும் எமக்கு விடுக்கப்பட்டு வருகின்றது.
மக்களின் இந்த நீண்டகாலக் கோரிக்கைக்கு மதிப்பளித்து, இந்த வருடத்துக்குள்ளேயே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு எமது அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான சட்டமூல வரைவுகள் மற்றும் மாற்று ஏற்பாடுகளை நீதி அமைச்சு தற்போது உத்தியோகபூர்வமாகத் தயாரித்து வருகின்றது.
அதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் எழக்கூடிய பாதுகாப்புத் தேவைகள் குறித்தும் நாம் ஆராய்ந்துள்ளோம். இதற்கமைய, பாரிய குற்றக் கும்பல்கள் மற்றும் திட்டமிட்ட ஆள் கடத்தல், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட விபரீதமான குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும், தடுப்பதற்காகவும் சர்வதேசத் தரத்துக்கு இணையான புதிய சட்டம் ஒன்று விரைவில் கொண்டுவரப்படும்.
நாம் கொண்டுவரவுள்ள இந்தப் புதிய சட்டமானது, மக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளை முழுமையாக உறுதிப்படுத்தும் வகையிலேயே மிகத் துல்லியமாக வடிவமைக்கப்படும். இது எமது நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை நிச்சயம் பாதுகாக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.
எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது நாட்டின் சாதாரண மக்களை ஒடுக்குவதற்காகவோ, அவர்களது ஜனநாயகக் குரல்வளையை நசுக்குவதற்காகவோ இத்தகைய கடுமையான சட்டங்களை எமது அரசு ஒருபோதும் பயன்படுத்தியது கிடையாது, இனி பயன்படுத்தப் போவதுமில்லை.” - என்றார்.